விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 15 வியாழக்கிழமை (30.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 011

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# உள்ளூராட்சி மன்றங்களை விரைவில் கலைக்கத் திட்டம்

## மார்ச் மாதம் தேர்தல்?

(கொழும்பு)

**பிரதேச சபைகள், மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் என்பன விரைவில் கலைக்கப்படவுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் நோக்கில் அவை கலைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.** (02ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன இளைஞன் காயத்துடன் சடலமாக மீட்பு

### கனகம்புளியடியில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கனகம்புளியடியில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது. கப்பம் கோரி ஆயுதாரிகளால் கடத்தப்பட்ட, ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய மகேந்திரன் செல்வம் என்பவரது சடலமே இது என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த திங்கட்கிழமை மீசாலையிலுள்ள அவரது வீட்டிற்கு சென்ற இருவர் மோட்டார் சைக்கிளில் அவரை அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஒரு வாகனப் புறோக்கர் எனவும் அழைத்துச் சென்றவர்கள் அவரின் நண்பர்கள் என தாம் நம்பியதாகவும் அவரது சகோதரர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் இளைஞர் அமெரிக்காவில் சுட்டுக்கொலை

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

பொறியியலாளரான வவுனியாவைச் சேர்ந்த தமிழ் இளைஞரொருவர் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளதாக வவுனியா குடியிருப்பிலுள்ள பெற்றோருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கொல்லப்பட்டவர் 25 வயதுடைய அமரசிங்கம் சுஜன் என்பவராவார். ஒருவருடத்திற்கு முன்னர் புலமைப்பரிசில் பெற்று அங்கு சென்றிருந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிலிருந்து மண்ணை எடுத்துச் செல்லும் தெற்கு மக்கள்

### பிரபாகரன் வாழ்ந்த ஊர் மண்ணாம்!

(முல்லைத்தீவு)

விடுதலைப்புலிகளது கட்டுப்பாட்டின் கீழிருந்த முல்லைத்தீவு மண் தெற்கிற்குப் போகத் தொடங்கியிருக்கின்றது. நாள்தோறும் லட்சக் கணக்கில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்கு செல்லும் சிங்கள மக்கள் பிரபாகரன் வாழ்ந்த ஊர் எனத் தெரிவித்து அங்கிருந்து மண்ணை எடுத்துச் செல்கின்றனர் என அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

இதுவரை 28 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வடக்கிற்கு சுற்றுலாவாக வந்து சென்றிருப்பதாக அண்மையில் படையதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள். இந்த நிலையில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவிற்கு வருகின்ற மக்களின் முக்கிய நோக்கமாக புதுக்குடியிருப்பு மண்ணே பிரதானமாக இருக்கின்றது. அவர்கள் எதுவித வேறுபாடின்றியும் இந்த மண்ணை எடுத்துச் செல்வதில் (02ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரிக்கு தெரிவான மாணவர்களின் விபரம்

சிவல்புரி சிங்காரம் எழுதும் 2011 ஆம் ஆண்டிற்கான சிறப்பு பலன்கள்

## ஆயுத முனையில் கொள்ளை முயற்சி வர்த்தகர்களிடையே அச்சநிலை

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் ஆயுத முனையில் கொள்ளைச் சம்பவ முயற்சி ஒன்று இடம்பெற்றுள்ளது. இதனால் வர்த்தகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஆயுதமுனையிலான கொள்ளைச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் நாச்சிமார் கோவிலடியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் (02 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸின் மீது பாய்கிறார் மங்கள சமரவீர!



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர விசனம் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் நடவடிக்கைகளால் சர்வதேசத்தின் மத்தியில் தலைகுனியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்
A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு

காலம்.: 02.01.2011 (ஞாயிற்றுக் கிழமை) நேரம்: காலை 10.00 மணி

இடம்: தேசிய வியாபார முகாமை நிறுவனம்
இல-40, கல்லூரி வீதி (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

பதிவுகளுக்கு: 021 222 0360/0361/0362 வயதெல்லை: 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்

நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவான மாணவர்களின் விபரம்!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2011ஆம் ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்கள் தமது நியமனக்கடிதங்களை நாளை வெள்ளிக்கிழமை 31ஆம் திகதி காலை 10.00மணிக்கு அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

வெளிமாவட்ட மாணவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.புதிய மாணவர்கள் அனைவரும் எதிர் வரும் 07ஆம் திகதி தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு:-

**கணிதம் (ஆங்கில மொழி)**

ஜி.கஸ்தூரி (அச்சுவேலி),பி.பிரசாந் (நல்லூர்), ரி.குணசீலன்-(சாவகச்சேரி),எஸ்.ஸ்ஞானுஜன்-(தாவடி வடக்கு),எஸ்.சிவஞானம்-(அல்வாய்),ஆர்.சுரேகா-(நல்லூர்),எஸ்.லக்சிகா-ட்டுவாழ்,என்.கே.எ[illegible]தவா-(உசன்), எஸ்.ரஜிதா (புலோலி தெற்கு),[illegible].தியாசனி (கந்தர்மடம்),

கே.பரமேஸ்வரன் (கரணவாய் கிழக்கு), எஸ்.வனஜா (கொக்குவில்), ஆர்.ஜெயபாலினி (கொக்குவில் கிழக்கு),கே.ஜசிந்தா (இடைக்காடு), என்.இராசலிங்கம் (கொக்குவில்),ரி.ஈ.அனுலா (உரும்பிராய்),எஸ்.கீர்த்திகா (சுன்னாகம்), ஜி.ஜனிதா (கொக்குவில்),ஏ.எஸ்.ஆனந்தராசா (பண்டாரிக்குளம்).

**விஞ்ஞானம் (ஆங்கிலமொழி மூலம்)**

கே.அரசிளங்குமரன் (நல்லூர்),ரி.கங்காதரன் (சிறுப்பிட்டி மத்தி),எம்.நிரோசாந் (உயரப்புலம்),ஜே.சொர்ணலிங்கம் (இணுவில் மேற்கு), கே.சோபனா (காரைநகர்),எஸ்.தர்சனா (தாவடி வடக்கு),ரி.சுந்தரலிங்கம் (கொக்குவில்), பி.பிரவிந்தா (உடுவில்),

எஸ்.ஏ.எம்.அனஸ் (ஓட்டமாவடி எல்.லலிதகலா(மட்டக்களப்பு),பி.இலக்கியா (ஆலயம்பதி),ஏ.ஜே.கௌரி சௌந்தனி (திருகோணமலை),யு.எம்.யோகேஸ்வரன் (திருகோணமலை),ஏ.புயனேந்திரன் (திருகோணமலை), பி.சோதிலிங்கம் (காரைதீவு),

**விசேட கல்வி**

வி.லவப்பிரியா-(நாவற்குழி),ரி.மதன்றாஜ்-(அச்சுவேலி),கே.சுந்தரலிங்கம் (காரைநகர்), எஸ்.டிலோஜன் (மட்டக்களப்பு), எஸ்.நவநீதராஜா (குறுந்தோயா கந்தப்பொல), எஸ்.தேவராசா (திருநெல்வேலி),

ஆர்.லக்ஸ்மிகாந்தன் (கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு),ஏ.நிரோசன் (பருத்தித்துறை), ரீ.முத்துலிங்கம் (புங்குடுதீவு),கே.சேனாதிராசா (வவுனியா),

ஆர்.செந்தூரன் (அச்சுவேலி மேற்கு), கே.வசந்த் (பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்), எஸ்.றேவதி (வாழைச்சேனை மட்டக்களப்பு), ஜி.யோகநிருபன் (கோப்பாய்), எஸ்.குலசிங்கம் (பண்டத்தரிப்பு),

எம்.ஏ.மயூரினா (மன்னார்), கே.அனோஜா (பதுளை),ஜி.லலிதா (வத்தவலை), பி.ஜோன்சன் (பத்தனை), எஸ்.கோகுலன் (பூநகரி),

**கணிதம் (தமிழ் மொழி)**

ஜி.கஸ்தூரி (இடைக்காடு),ரி.ஜசோதா (சாவகச்சேரி),எம்.துசிர்தன் (குப்பிளான் வடக்கு), எஸ்.பிந்துஜன் (சாவகச்சேரி), ரி.குணசீலன் (சாவகச்சேரி),எஸ்.சிவஞானம் (அல்வாய் கிழக்கு), எஸ்.லக்சிகா (நீர்வேலி மேற்கு), பி.பாலுக்கணநாயகம் (அரியாலை), என்.சுரேந்தன் (மீசாலை வடக்கு),எஸ்.செல்வராசா (எழுதுமட்டுவாழ்),

ரி.மகீந்தன் (வட்டு.தெற்கு),ரி.ரட்ணதுரை (உரும்பிராய் மேற்கு),பி.நிருசா (இடைக்காடு), பி.அமலகா (இருபாலை கிழக்கு),எஸ்.மயூரதன் (கொக்குவில் கிழக்கு),

வை.கமலராஜ் (மல்லாகம்), எஸ்.றஜிதா (புலோலி),எஸ்.வனஜா (கொக்குவில் மேற்கு), கே.சுவர்ணா (அச்சுவேலி வடக்கு), கே.ஜசிந்தா (அச்சுவேலி),

**ஆரம்பக் கல்வி**

ரி.சுமித்தா (உடுவில் சுன்னாகம்),பி.தீபா (அச்செலு நீர்வேலி),ஆர்.கௌதமி (காங்கேசன் துறை),வி.ஆனந்தமயில் (வல்வெட்டித்துறை), ஏ.பகிரிகா (நீர்வேலி வடக்கு),ஜி.நடராஜா (சுன்னாகம் கிழக்கு), ரி.பரீடா (ஆனைக் கோட்டை),

எம்.கே.சுந்தரலிங்கம் (காரைநகர்), கே.ருசந்தா (நாவற்குழி சந்தி),வி.சுதாகரன் (இளவாலை), டி.சிறிதேவன் (ஊரெழு மேற்கு), ஜி.நிசாலினி (கரவெட்டி),ஏ.ராஜமோகன் (அல்வாய்), ரி.முத்துலிங்கம் (புங்குடுதீவு), எஸ்.குலசிங்கம் (பண்டத்தரிப்பு), ரி.ஜென்சிகா (வரணி),

ஆர்.தியாகராஜா (துன்னாலை வடக்கு), என்.சிவஞானசுந்தரம் (நாகர்கோவில் தெற்கு), ஜி.கணபதிப்பிள்ளை (அராலி தெற்கு), வி.ஜலயா (துர்க்காபுரம் மகளிர் இல்லம்), கே.தர்சிகா (புதுவளவு வல்வெட்டித்துறை),

ரி.நிவேதிகா (நயினாதீவு), ஏ.கஜேந்தினி (கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்), கே.சிந்துஜா (சுன்னாகம் கிழக்கு),ரி.திவ்வியா (புலோலி கிழக்கு),எம்.தர்சிகா (மட்டுவில் தெற்கு), ஜே.றொக்ஷன் (முல்லைத்தீவு),ரி.கஜேந்திரராஜா (பிரமந்தனாறு),

**நடனம்**

ரி.நிருஜாயினி (திருகோணமலை), ரி.சுமித்தா (உடுவில்),ஆர்.கௌதமி (காங்கேசன்துறை), ஆர்.தருணித்தா (இல.26 சங்கமன் கிராமம்), கே.ஜனனி (தம்புலுவில் 2),எஸ். தனுசா (வத்தல),பி.உகந்தினி (அளவெட்டி),கே.மேகலா (வேலணை-06),

ஆர்.லோஜிதா (கல்முனை),ரி.பவித்ரா (வண்ணார்பண்ணை),ரி.குலந்தினி (கல்முனை), எம்.பசில்டா (சுன்னாகம்),எஸ்.உகன்யா (வல்வெட்டித்துறை),பி.ரேவதி (மட்டக்களப்பு),

பி.சுபாஜினி (சித்தாண்டி),பி.கோபிநாத் (திருகோணமலை),எஸ்.ரேக்கா (வவுனியா), எம்.மேரிகாஞ்சனா (மன்னார்),கே.மதனிகா (கல்முனை),

**நாடகமும் அரங்கியலும்**

வை.ரம்மிகா (நீர்வேலி மத்தி),கோ.கிரிதரன் (வேலணை),சோ.[illegible]ஷியா (துன்னாலை), சி.அருட்சுதன் (வேலணை மேற்கு),சா.டிலோஜன் (மட்டக்களப்பு), மா.மனோபிரியா (புல்லுமலை),அ.நிரோசன் (பருத்தித்துறை),சா.கலையரசி (மண்டூர்),லி.சந்திரகாசன் (மானிப்பாய்),

செ.டன்சினி (சுழிபுரம் கிழக்கு), அ.கணேஸ் (வில்லூன்றிப் பிள்ளையார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்),கி.அமிர்தவர்சினி (ஏறாவூர் 04),த.கோகுலராவணன் (மட்டக்களப்பு),யோ.யுகந்தினி (கல்முனை),க.சிந்துஜா (கல்முனை), வீ.காயத்திரி (மட்டக்களப்பு),

**சங்கீதம்**

த.துளசிகா (பருத்தித்துறை),மு.துவாரகா (புங்குடுதீவு),எஸ்.சர்மிளா (உரும்பிராய் கிழக்கு), எஸ்.லாவண்யா (இந்துவில் மேற்கு), கே.அனுசன் (இணுவில்), பிசுதாஜினி (இணுவில்), எம்.அஜந்தினி (காரைதீவு) விசுதர்சினி (சுன்னாகம்),

என்.பாசினி (கோப்பாய் வடக்கு), பி.செந்தூரன் (கொடிகாமம்),எஸ்.தாரணி (இணுவில் கிழக்கு),கே.நிறோஜா (சாவகச்சேரி), பீ.மதிவதனி (பெரிய போரதீவு),ஏஸ்.கௌதனா (இல.06 துறைநீலாவணை),

என்.நளினி (செட்டிக்குளம்),எ.மொகமட் சாதீர் (அக்கரைப்பற்று),ரீ.மதனரூபி (தம்பிலுவில்), எஸ்.கஸ்தூரி (கிளிநொச்சி).

**விஞ்ஞானம் (தமிழ் மொழி மூலம்)**

கே.அரசிளங்குமாரன் (நல்லூர்), எஸ்.தேவப்பிரியா (மீசாலை வடக்கு),ரீ.கங்காதரன் (சிறுப்பிட்டி),எம்.நிறோசாந் (ஆனைக்கோட்டை), வீ.சுகன்ஜா (திருநெல்வேலி),எஸ்.தர்ஷனா (தாவடி வடக்கு),ஜீ.கோகிலன் (காரைநகர்), எம்.ஜேசுதாசன் (இளவாலை), ஜீ.சிறினிவாசன் (சிறுப்பிட்டி),

பி.பிரவிந்தா (உடுவில்), என்.தில்லைநாதன் (கல்வியங்காடு),எஸ்.ஞானேஸன் (வட்டுக் கோட்டை),கே.கஜந்தா (திருநெல் வேலி), ஆர்.தாரணி (சுதுமலை தெற்கு),எஸ்.சாமினி (அல்வாய்),ஏ.அஞ்சனா (கரணவாய் மேற்கு) .வைதங்கமயில் (புலோலி), ரீ.சிவசண்முகநாதன் (சுழிபுரம்), எம்.ஞானப்பிரியா (அல்வாய்), எம்.பயாஸ் (கிண்ணியார்).

---

## பூட்டிய வீட்டிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(கொழும்புத்துறை)

ஈச்சமோட்டை துரையப்பா வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று தினங்களாக பூட்டிய நிலையில் இருந்த வீட்டினை நேற்று நண்பகல் 12 மணியளவில் வீட்டின் உரிமையாளர் திறந்து பார்த்த போது துர்நாற்றத்துடன் ஆணொருவரின் சடலம் காணப்பட்டதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் அருகில் சென்றுபார்த்த போது போர்வையால் தலை சுற்றப்பட்ட நிலையில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் உயிரிழந்தவர் மணியந் தோட்டத்தைச் சேர்ந்த ஆர்.சந்திரசிறி (வயது 42) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-7, 5)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனமும் இலங்கை பொறியியலாளர் சங்க வட பிராந்தியமும் இணைந்து நடத்தும் குழாய் நீர் விநியோகத்திற்கான நிலைத்தகு அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 4.30மணி தொடக்கம் 6.30மணிவரை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் எந்திரி எஸ்.ஜி.ஜி.ராஜ்குமார் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (ஸ்ரீ-2)






## முல்லைத்...

ஆர்வம் காட்டியதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

பிரபாகரனின் முகாம் எங்கிருந்தது பிரபாகரன் எங்கு தங்கியிருந்தார் என அம்மக்கள் முல்லைத்தீவுப் பகுதி மக்களை கேட்டு எடுத்துச் செல்வதாகவும் அங்கு வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-1)

## தவறிவிட்டது

4ஆம் வட்டாரம், முள்ளியவளை என்ற முகவரியைச் சேர்ந்த தர்மலிங்கம் சத்திய தாஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (821194342V) நெல்லியடி சந்தியில் 28.12.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்.

தொடர்புக்கு:- 4ஆம் வட்டாரம் முள்ளியவளை

T.P:-0771790517

(3307)

## உள்ளூராட்சி மன்றங்...

பிரதேச சபைகள்,மாநகரசபை சபைகள், நகரசபைகள் ஆகியன விரைவில் கலைக்கப்பட உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி மாதம் 4ம்திகதி உள்ளூராட்சி மன்றத்திருத்த சட்ட மூலம் தொடர்பான யோசனைத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சிமன்ற புதிய திருத்தச்சட்ட மூலம் அமுல்படுத்தப்படுவதனை ஆளும் தரப்பு பெரிதாக விரும்பவில்லை என நம்பகத்தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச்சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தொகுதிவாரி மற்றும் விருப்பத் தெரிவு முறைமைகளின் கீழ் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென இந்த பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவோர் எதிர்வரும் ஜனவரி 1-15 வரையில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடாத தகுதியானவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்படும் எனவும் இவ்வாறு நேர்முகத் தேர்வில் தெரிவாவோர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவார்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள தொகுதிவாரி மற்றும் விருப்பத் தெரிவு முறைமை வெளிப்படைத் தன்மையானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.தற்போதைய முறைமையைப் பயன்படுத்தி தேர்தலை நடத்தினால் ஊழல் மோசடிகளை மேற்கொள்ள முடியும் இந்த முறைமை அரசாங்கத்திற்கு சாதகமானது.புதிய முறையில் தேர்தல் நடத்தினால் அது அரசாங்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எந்தவொரு முறைமையிலும் எந்தவொரு நேரத்திலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தினாலும் அதனை எதிர்நோக்கத் தயார் என ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

உத்தேசிக்கப்பட்ட முறைமையினால் நன்மை அடைய முடியும் என அரசாங்கம் கருதிய போதிலும் தற்போது அந்த முறைமை அரசாங்கத்திற்கு பாதகத்தன்மையை ஏற்படுத்தியுள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஆயுத...

தொடர்பாக தெரியவருவதாவது, குறிப்பிட்ட வர்த்தக நிலையத்திற்கு முகமூடியணிந்து மோட்டார் சைக் கிளில் சென்ற இருவர் ஆயுதத்தைக் காட்டி மிரட்டி வர்த்தகரிடம் பணம் கேட்டுள்ளனர்.

எனினும் வியாபார நடவடிக்கைகள் அதிகமாக இல்லை என வர்த்தகர் தெரிவித்ததையடுத்து அவர்கள் அவரை அச்சுறுத்தி விட்டு சென்றுள்ளனர். இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கத்தியும் புத்தியும்

ஒரு திருடன் ஒரு வீட்டில் போய் திருடவேண்டும் என்று திட்டம் போட்டான்.

இருட்டியதும் திருடவேண்டும். ஆனால் இரவில் வாசல் கதவை சாத்தி உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டு விடுவார்களே.... என்ன செய்வது?எப்படி வீட்டுக்குள் போவது? என்று யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.

"சரி, பகல் நேரத்திலேயே யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டுக்குள் நுழைந்து விடுவோம். அங்கேபோய் எங்கேயாவது ஒளிந்து கொள்வோம். இருட்டும் வரை பேசாமல் இருப்போம்.

இரவு எல்லோரும் தூங்கியபின் மெதுவாகப் போய் பீரோவைத் திறந்து இருக்கிறது முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்'' என்று திட்டம் போட்டான்.

அதேபோல் ஒருநாள் பின்னேரம் அந்த வீட்டுக்காரன் எங்கேயோ வெளியில் புறப்பட்டுப் போனான். வீட்டுக்கார அம்மா சமையறைக்குள் நின்று சமைத்துக் கொண்டிருந்தார்.

திருடன் பார்த்தான். இதுதான் சமயம் என்று அந்த வீட்டுக்குள் மெதுவாக நுழைந்து விட்டான்.

எங்கே ஒளியலாம் என்று பார்த்தான். வலது பக்கம் ஒரு அறை இருந்தது. அது படுக்கையறை. அங்கேயிருந்த பெரிய கட்டிலுக்கடியில் போய்ப் பதுங்கிக் கொண்டான்.

இருட்டியதும் நம்முடைய வேலையை ஆரம்பிப்போம். அதுவரைக்கும் பொறுமையாக இருக்கவேண்டும்'' என்று சொல்லி பேசாமல் வாயை மூடிக்கொண்டு கம்மென்று இருந்து விட்டான்.

நீண்டநேரம் கழித்து வெளியே போயிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்தான், சாப்பிட்டான். லைற்றை நிறுத்தி விட்டு படுத்து விட்டான்.

அந்த அம்மாவும் வேலையெல்லாம் முடித்துவிட்டுத் தூங்கி விட்டார்.

நள்ளிரவு நேரம் விடிவிளக்கு இலேசாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரன் மெதுவாக கண்முழித்தான். கட்டிலுக்கு நேராக எதிரில் ஒரு கண்ணாடி இருந்தது. அதில் பார்த்தான். கட்டிலுக்கு கீழே ஒரு திருடன் ஒளிந்திருப்பது தெரிந்துவிட்டது.

உடனே அவன் "திருடன் திருடன்'' என்று சத்தம் போடவில்லை. மேசையில் இருக்கும் கத்தியை கையில் எடுத்து வைத்துக் கொள்வோமா? என்று யோசித்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் கத்தியை உபயோகப்படுத்துவதைவிட புத்தியை உபயோகப்படுத்துவதுதான் சாமர்த்தியம் என்று நினைத்தான். உடனே அதன்படி செயற்பட ஆரம்பித்தான்.

எதையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் மிகவும் சர்வசாதாரணமாக தன் மனைவியிடம் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்திசாலி. அதனால் அவளும் வீட்டுக்காரர் கேட்ட கேள்விக்குப் பொருத்தமாக பதில் சொன்னாள்.

இவன் கேட்டான்:

"இதோ பார்... நமக்குக் குழந்தை பிறந்தால் அதற்குக் கிருஷ்ண மூர்த்தி என்றுதான் பெயர் வைக்க வேண்டும்'' என்றான்.

"அதெல்லாம் முடியாது. ஆண் குழந்தையாக இருந்தால் ஏகாம்பரம் என்றும் பெண் குழந்தையாக இருந்தால் பங்கஜவல்லி என்றும் பெயர் வைக்க வேண்டும்'' என்றார் அந்த அம்மா.

"அதெல்லாம் முடியாது. நான் முடிவு செய்து விட்டேன். கிருஷ்ணமூர்த்தி'' என்று கத்தினான் அவன்.

"ஏகாம்பரம், பங்கஜவல்லி– ஏகாம்பரம் பங்கஜவல்லி'' என்று கத்தினாள் மனைவி.

ஒரே சத்தமாகிவிட்டது.

இதைக் கேட்டதும் பக்கத்து வீட்டில் – எதிர்வீட்டில் இருந்தவர்களெல்லாம் எழுந்து ஓடிவந்து இவர்களுடைய வீட்டைத் தட்டினார்கள்.

இவன் சாவகாசமாக எழுந்து போய் கதவைத் திறந்தான்.

"என்ன... இந்த இரவு நேரத்தில் எங்களையெல்லாம் ஏன் கூப்பிட்டீங்க? யாருக்கு என்ன ஆச்சு?'' என்று கிருஷ்ணமூர்த்தி, ஏகாம்பரம், பங்கஜவல்லி எல்லோரும் கேட்டனர்.

"அடடே! உங்களைக் கூப்பிடவில்லை. குழந்தைக்குப் பெயர் வைப்பது சம்பந்தமாக எங்களுக்குள் சண்டை வந்து விட்டது. அதுதான் விடயம். வேண்டுமானால் இதோ கட்டிலுக்கடியில் ஒளிந்திருக்கும் திருடனைக் கேட்டுப் பாருங்கள்.

அவன்தான் இதற்குச் சாட்சி'' என்றான்.

உடனே எல்லோரும் விடயத்தைப் புரிந்து கொண்டு திருடனைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார்களாம்.

நெருக்கடியான நேரங்களில் பதறாமல் புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக்கதை. புத்திசாலித்தனமாக இருக்கும் ஒரு குடும்பத் தலைவி இருக்கிறார். அவர் என்ன செய்வார் தெரியுமா?

எல்லோரும் இரவில் கதவை உட்பக்கமாக பூட்டி கொண்டு தானே தூங்குவார்கள். ஆனால் அந்த அம்மா வீட்டை வெளிப்பக்கமாக பூட்டி விடுவார். எதிர்வீட்டுக்காரர்களிடம் சொல்லி தினமும் இப்படி பூட்டி விடச் சொல்வார்.

"ஏன் இப்படி செய்றீங்க? திருடன் உட்புகாமல் இருப்பதற்காகவா?'' என்று கேட்டேன்.

"இல்லை. சுலபமாக வெளியே போய்விடக் கூடாதென்பதற்காக'' என்றார்.

"என்ன சொல்றீங்க?'' என்றேன்.

"ஆமாம். இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு'' என்று தன்னுடைய வீட்டுக்காரரைக் காட்டினார்.

"பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன் வீட்டைப் பூட்டி வைப்பது ஒரு பெரிய விடயமல்லவா?.''

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு(NCICT) யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி. அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல. 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரியில் கொழும்பு சட்டக்கல்வி வட்டத்தின் வளவாளர்களினால் நடாத்தப் படவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 0777246723 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கொழும்பு சட்டக்கல்வி வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-9)

# 30 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள முப்பது வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய், திருநெல்வேலி, கொக்குவில், இணுவில் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சில நாட்களாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளை அடுத்தே இவ் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.மேலும் இவ்விடயம் பற்றி தெரிய வருவதாவது,

குறித்த வர்த்தக நிலையங்கள் உணவுப் பொருட்களான அரிசி ,மா,சீனி போன்ற வற்றின் விலைப்பட்டியலை பொதுமக்களின் பாவனைக்கு காட்சிப்படுத்தப்படவில்லையெனவும் குளிர்பானங்கள், பொறிக்கப்பட்ட விலையிலும் அதிகமான விலைக்கு விற்றமை தொடர்பாகவும் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150-180 | 160 | 90 |
| உருளைக்கிழங்கு | 55 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 170 | 200 | 150 |
| தக்காளி | 60 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 40 |
| கோவா | 50 | 80 | 70 |
| கரட் | 30 | 120 | 60 |
| பூசணி | 15 | 40 | 40 |
| புடோல் | 50 | 100 | 90 |
| வாழைக்காய் | 35 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 190 | 200 | 160 |
| பாகற்காய் | 90 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 60 | 50 |
| பயற்றங்காய் | 180 | 200 | 180 |
| லீக்ஸ் | 80 | 140 | 90 |
| பீற்றூட் | 70 | -- | 80 |
| கறிமிளகாய் | 190 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 160 | -- | -- |
| போஞ்சி | 70 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 135 | 40 | 90 |
| கீரை – 1 பிடி | 15 | 50 | 40 |
| தேசிக்காய் | 70 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 65 | 50 | 45 |

# இராசி பலன்

*30.12.2010*
*(மார்கழி 15, வியாழக்கிழமை)*
*தசமி முன்னிரவு 7.17 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 4.31 மணிவரை*
*இராகுகாலம் 1.59-3.29 மணிவரை*
*சுபநேரம் 7.59-9.29 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** உடல் நலம் சீராகும், சிறப்பான நாள், கடன் சுமையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், நண்பர்கள் சந்திப்பால் ஏற்றம் பெறுவீர்கள்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கியமான முடிவெடுப்பீர்கள், தொலைபேசித் தகவலால் மகிழ்ச்சி காண்பீர்கள், சிறிய வருமானங்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பிள்ளைகளுக்காக சில செலவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்தியொன்று வந்து சேரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பெற்றோரின் பாச அரவணைப்பில் திகழ்வீர்கள், பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும்.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர், நண்பர்கள் வலியவந்து உதவி செய்வார்கள்.

**கன்னி** தொழில் வளர்ச்சிக்கு பெரியோர் உறுதுணை புரிவர், இனிய தகவல்கள் இல்லம் தேடி வரலாம், புத்திசாதுரியத்தால் காரியம் சாதிப்பீர்கள்.

**துலாம்** பக்குவமாகக் பேசிக் காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர்களிடத்தில் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள்கள், அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** பயணங்களால் அலைச்சல் அதிகரித்தாலும் சிறு ஆதாயம் கிடைக்கலாம், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றும், விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**மகரம்** நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத நேரத்தில் பெரியோர்களின் உதவி கிடைக்கலாம், தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்.

**கும்பம்** விருந்தினரை வரவேற்று சந்தோசப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், பூமியால் இலாபம் கிடைக்கும்.

**மீனம்** பிறரது வேலைகளை நீங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், எதிர்பாராத வகையில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், திடீர்ச் செலவுகளால் பணக்குறைவு ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் பாடசாலை வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர், மாவட்டப் பொறியியலாளர், யுனிசெப் நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், கலந்துகொண்ட ஒவ்வொரு வலயத்தினதும் யுனிசெப் இணைப்பாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# திருட்டுச்சம்பவம், கலாசாரச் சீரழிவுடன் தொடர்புடைய இளைஞர் குழு கைது

(கொழும்புத்துறை)

அரியாலை மாம்பழம் சந்தியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பங்கள், குழுச் சண்டைகள் கலாசாரச் சீரழிவுகளுடன் தொடர்புடைய இளையோர் குழு இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம்திகதி அரியாலை புங்கங்குளம் வீதியில் உள்ள வீடொன்றில் சில வீட்டுப்பாவனைப் பொருட்களைத் திருடி ஆட்டோவில் ஏற்ற முற்பட்டபோது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் இவர்களைக் கையும் மெய்யுமாக பிடித்தனர்.

இவர்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் மூன்று இளைஞர்கள் பல தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

# அல்வாய் தெற்கில் 3 வீடுகளில் கொள்ளைச் சம்பவம்

(கரவெட்டி)

அல்வாய் தெற்குப் பகுதியில் மர்மக் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

ஒரே இரவில் மூன்று வீடுகளுக்குள் புகுந்த மர்மக் கொள்ளையர்கள் வீட்டை சல்லடைபோட்டு தேடி 3பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30மணிக்கு இடம்பெற்றுள்ளது.கூரிய ஆயுதங்களுடன் அப்பகுதிக்கு வந்த கொள்ளையர்கள் மாதாகோவிலடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் சமையலறைக் கண்ணாடியை உடைத்து உள்நுழைந்து வீட்டை சல்லடை போட்டு தேடியுள்ளனர். அச்சமயம் விழித்த வீட்டுக்காரர்கள் கூக்குரலிடவே அவர்கள் பின்வழியாக தப்பிச்சென்றுள்ளனர். அதே கொள்ளையர்கள் சற்றுத் தூரத்தில் உள்ள மற்றொரு வீட்டிற்குள் நுழைந்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட வேளை அப்பகுதிமக்கள் ஒன்றுசேர அங்கிருந்தும் தப்பிச்சென்று அல்வாய் வீதியில் உள்ள ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் வீட்டின் கதவை சேதப்படுத்திவிட்டு நாவலடி வீதியூடாக தப்பிச்சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அல்வாய் பகுதியில் பல கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிறைச்சாலையில் இருக்கும் வேளை அண்மைக்காலமாக கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபடும் மர்மநபர்களை தெரியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். எனவே பொதுமக்கள் இதுவிடயமாக விழிப்பாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)




# எப்பாகத்திலும் தலைநிமிர்ந்து வாழ ஆங்கிலக் கல்வி மிகவும் அவசியம்

## அதிபர் எஸ்.சேதுராஜா தெரிவிப்பு

(கரவெட்டி)

மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு ஆங்கிலக்கல்வி முக்கியமாக விளங்குகின்றது. அதை எமது பிள்ளைகளுக்கு ஆரம்ப வகுப்பு முதலே தொடர்ச்சியாக கற்றுக் கொடுக்கும் போது அவ் மாணவர்கள் சிறந்த கல்விமான் மட்டுமல்லாது உலகில் எப்பாகத்திலும் தலைநிமிர்ந்து வாழ்வார்கள் என்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட தரம் 6 மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு பாடசாலையின் எல் மண்டபத்தில் இடம்பெற்றபோது தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், பலகல்விமான்கள் குடிகொண்ட வடமராட்சிப் பிரதேசத்தில் ஒரு தேசிய பாடசாலை இல்லாதது பெரும்குறைபாடாகவே உள்ளது. அக்குறைபாட்டை எமது பாடசாலை அடுத்து வரும் ஆண்டுகளுக்குள் நிறைவேற்றும். இப் பாடசாலையில் இருந்து பல கல்விமான்கள் உருவாகி இன்று பல நாடுகளிலும் உயர் பதவியில் இருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் 1956 ஆம் ஆண்டு 4 பாடசாலைகள் மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டன.

இதில் எமது பாடசாலை உட்பட வலிகாமத்திலும் யாழ்ப்பாணத்திலும் தீவகத்திலும் இவ்வாறு பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

இதன் நோக்கம் அக் கிராமங்களில் உள்ள சிறுசிறு பாடசாலைகளில் இருந்து கல்வியில் மற்றும் விளையாட்டுக்களில் சிறந்து விளங்கும் மாணவர்கள் மகாவித்தியாலங்கள் ஊடாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சமூகங்களுக்கு சிறந்த சேவையை வழங்கிய வரலாற்றை நாம் எம் கண் முன்னால் காணுகின்றோம்.

அதேபோன்று எதிர்வரும் காலங்களில் எமது சந்ததியினர் எமது பாடசாலையில் கல்வி கற்று எமது பாடசாலை ஊடாக சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த பயனுள்ளவர்களாக உருவாகவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-24)

# தொடரும் ஆன்மீக கல்விசார் பயணம் சுயசரிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அதிவண . கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளாரின் "தொடரும் ஆன்மீக கல்விசார் பயணம்" சுயசரிதை நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக் கழக நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு கலைத்தூது அழகியற் கல்லூரி இயக்குநர் வணபிதா மரிய சேவியர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை இலங்கைத் திருச்சபை யாழ்.குருமுதல்வர் வண. எஸ்.பி.நேசகுமார், வாழ்த்துரையினை பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரிய[illegible] எஸ்.சிவலிங்கராஜா, வெளியீட்டுரையினை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

முதற்பிரதியினை அவுஸ்திரேலியா விக்டோரியா பல்கலைக்கழக தாவர மருத்துவ வியல் பேராசிரியர் நித்திகனகரத்தினம் பெற்றுக்கொளள்ளவுள்ளார்.

நயப்புரையினை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளரும் நூலாசிரியரின் மாணவனுமான ச.லலீசன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-4)

# செபமாலை தாசர் சபைக்கு புதிய குருக்கள்

(யாழ்ப்பாணம்)

செபமாலை தாசர் சபையைச் சேர்ந்த மூன்று தியாக்கோன்களாகிய கி.கொட்வின், ஜே.வின்சன், ஜோ.பீ.டன்சன் ஆகியோர் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ள திருப்பலியின் போது யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்கள். (ஸ்ரீ-2)

# தமிழர்தம் பண்பாட்டை வெளிப்படுத்தி இனம் காட்டுவதாக நடனக்கலை உள்ளது

## கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

தமிழர்களுடைய பண்பாட்டை வெளிப்படுத்தி தமிழர்களை உலகில் இனங் காட்டுவதாக நடனக்கலை காணப்படுகிறது.

புலம்பெயர்ந்தஎம்மவர்கள் எமது கலையை, பண்பாட்டை மறக்கவில்லை என்பதற்கு ஓர் சான்றுதான் செல்வி தாட்சாயினி மணிவாசகன், செல்வி ஜெயதருணி ஜெயபாலேந்திரன் ஆகியோரது நாட்டியாஞ்சலி நிகழ்வாகும் என யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார்.

திருமறைக்கலாமன்ற [illegible] யகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற நாட்டியாஞ்சலி நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், நடனக் கலை என்பது வெறும் மகிழ்ச்சிப்படுத்துகின்ற கலை மட்டுமல்ல அது ஒரு தெய்வீகக் கலை. உடல் மொழியால் உள்ளங்களுக்கு அமைதி கொடுக்கும் கலை. ஒரு நடன மாதுவுக்கு ஆடலும் பாடலும் அழகும் இருக்கவேண்டும் என்று சிலப்பதிகாரம், நாட்டிய சாஸ்திர [illegible] கூறுகின்றன. பாவம் இல்லையேல் பரதம்இல்லை. ரசமில்லையேல் நாட்டியத்திற்கு உயிரில்லை. அன்னை-பிள்ளை, கணவன்-மனைவி, நண்பன்-நண்பி, காதலன்-காதலி, பக்தன்-கடவுள் இவர்களுக்கிடையில் பிறப்பதுதான் பாவம். அதனால் தான் பாவம் இல்லாது போனால் நடனத்திற்கு உயிர் இருக்காது.

இந்த இரண்டு நடனக் கலைஞர்களும் தம் ஆடற்திறத்தால் அரங்கை உறைய வைத்து பாவம் உணர்ச்சிகளை ரசிகர் மனதிலும் தூண்டக்கூடிய வகையில் நடன விருந்தளித்தமை எம்மை மெய்சிலிர்க்க வைத்தது என்றார். (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீதியை மேவிப் பாயும் வெள்ளத்தால் வீதி அரிக்கப்பட்டு உடையும் அபாயம்!



தற்போது பெய்துவரும் பருவமழையினால் கிளி/ மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள ஏ-9 சாலைக்குமேலாக வெள்ளம் பாய்கின்றது.

இவ்வீதிக்கு மேற்குப் புறமாகவுள்ள கிராமங்களான உதயநகர், ஆனந்தபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து பாயும் வெள்ளநீர் இவ்வீதிக்கு குறுக்காக இடப்பட்டுள்ள குழாயினூடாகவே வெளியேறவேண்டும். இப் பாதைக்கு குறுக்காக ஒரு நீர்போக்குக் குழாய் இடப்பட்டு இருப்பதனால் இவ்விடத்தில் தேங்கும் அதிக வெள்ளநீர் வீதியை மேவிப்பாய்கின்றது.

இவ்வாறு மேவிப்பாயும் வெள்ளநீர் அருகில் உள்ள அம்மன் ஆலயத்திற்குள் பாய்வதனால் இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அதுமட்டுமன்றி அயலில் உள்ள வீடுகளுக்குள்ளும் இவ் வெள்ளநீர் புகுந்துவிடத் தவறுவதில்லை.

இவ்வீதி திருத்தும் பணியில் அதிகாரமுடையவர்கள் செயற்படாது போனால் இப்பாதை அரிக்கப்பட்டு உடைந்து போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

எனவே இவ்விடத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நீர் போக்குக் குழாயின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனந்தபுர மக்கள்

# கொழும்பில் நேற்று முதல் பாதுகாப்பு கமராக்கள் ஊடான கண்காணிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் நேற்று முதல் பாதுகாப்பு கமராக்களினூடான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தலைமையில் இது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.

புறக்கோட்டையில் உள்ள பொலிஸ் நலம்புரி கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு நேற்று பிற்பகல் 4 மணிக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சி.சி.ரி.வி. செயற்பாடுகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

முதல் கட்டமாக கொழும்பு நகரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பின்பு படிப்படியாக ஏனைய பிரதான நகரங்களில் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

குற்றச்செயல்கள் மற்றும் விபத்துக்கள் போன்றவற்றை உரிய முறையில் கண்காணித்து உடனுக்குடன் தடுத்து நிறுத்தும் வகையிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# தமிழ் பேசும் இரண்டாயிரம் பொலிஸார் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களுக்கு தேவையான தமிழ் பேசும் பொலிஸாரை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் ஆரம்பமாகும் என பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் தமிழ் பேசும் பொலிஸார் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வடபகுதியில் பல பொலிஸ் நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அந்தப் பணிகள் நிறைவடையும் எனவும் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய குறிப்பிட்டார்.

இதேவேளை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளும் எதிர்வரும் காலங்களில் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 4 அமைச்சுக்களை ஒன்றிணைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ஆலோசனை

(கொழும்பு)

திறமை மிக்க சமுதாயமொன்றை நாட்டில் உருவாக்குவதற்கு நான்கு அமைச்சுக்களை ஒன்றிணைத்துத் தேசியக் கொள்கையொன்றைத் தயாரிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

உயர் கல்வி, இளைஞர் விவகாரம், உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு மற்றும் கல்வி ஆகிய அமைச்சுகள் இணைந்து எதிர்காலத் தீர்மானங்களுக்கான செயற்றிட்டமொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த அமைச்சர்களுக்கிடையிலான முதற்கட்டச் சந்திப்பு அண்மையில் இடம் பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் திட்டங்களை வகுப்பதற்காகக் குறித்த அமைச்சர்களுக்கிடையில் மாதாந்தம் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகவும் இதன் மூலம் கல்வி கற்கும் சிறுவர்களின் திறமைகளை விருத்தி செய்தல் மற்றும் அவர்களின் திறமைகளை உபயோகித்து ஆற்றல் மிகுந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையர் ஒருவர் இத்தாலியில் கைது

சட்டவிரோதமான முறையில் இரண்டு கத்திகளை வைத்திருந்தமைக்காக இத்தாலியில் வைத்து இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் மேலும் இரண்டு இலங்கையர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

மல்டா நகரில் இருந்து உரோமில் உள்ள விமான நிலையத்திற்கு செல்லும் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது காற் சட்டைப் பையில் 7.5 சென்ரிமீற்றர் மற்றும் 9 சென்ரிமீற்றர் நீளமான இரண்டு கத்திகள் இருந்தது

குறித்த இரண்டு ஆயுதங்களும் எங்கிருந்து பெறப்பட்டன என பொலிஸார் எழுப்பிய கேள்விக்கு சரியாக பதில் வழங்காத நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அங்கிருந்து விமானம் மூலம் கட்டார் செல்வதற்கு ஆயத்தமான நிலையில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


# 21ஆவது பிறந்தநாள் நினைவுகளும் 22ஆம் மாத நினைவலைகளும்

பிறப்பு 30 . 12 . 1989



இறப்பு 03 . 03 . 2009

## செல்வி சிவகௌரி சிவபாலன்

எம் குல விளக்கே
பாசமலரே ஒரு நாளாவது உன்முகம்
பாராமல் இருந்ததில்லை இருபத்தி இரண்டு
மாதங்களாய் உனைப் பாராமல் இருக்கின்றோம்
தாங்க முடியவில்லையம்மா உன்பிரிவு
இன்று நீ இருந்தால் 21 ஆவது பிறந்தநாளை
விமரிசையாகக் கொண்டாடி இருப்போம்
இன்று உன் படத்திற்கு மாலையிட
வைத்து விட்டார்கள் படுபாவிகள்
இப் பிறந்தநாளில் உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

611/6, இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

அப்பா, அம்மா, தம்பி.

(3294)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி பி.சத்தியமூர்த்தி, அவரது பாரியார் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரும் வவுனியா நகரசபையின் உபதலைவருமாகிய எம்.எம். ரதன் தலைமையுரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து அவுஸ்திரேலியாவிற்கு விளக்கம்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டமை, இடம்பெயர் மக்களின் தற்போதைய நிலைமை மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தலைமையிலான அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவினர், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா, அவுஸ்திரேலிய ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஜொயல் பிட்ஸ்பிபியோனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அவஸ்திரேலிய பாராளுமன்ற முறைமை, அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அமைச்சர் சிறிபால டிசில்வா, அந் நாட்டு பாராளுமன்ற செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ளதாகவும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் மக்களின் காத்திரமான ஒத்துழைப்பு அவசியம் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## தேசிய வாசிப்பு மாத கட்டுரைப்போட்டி முடிவுகள்

வலி. கிழக்கு பிரதேசசபையின் புத்தூர் உப அலுவலகத்தில் நூலகப் பிரிவினரால் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கடந்த ஒக்டோபர் மாதத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகளை வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

இதில் முதலாம் இடத்தை க.திவிஜா (யா/சோமஸ்கந்தாக் கல்லூரி), இரண்டாமிடத்தை செ.மதிதரா (யா/புத்தகலட்டி விஷ்ணுவித்தியாலயம்),மூன்றாமிடத்தைச் இ.கிருத்திகா (யா/சோமஸ்கந்தாக் கல்லூரி)ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர். (ஸ்ரீ-9)

## உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்



கொழும்பு உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக மயில்வாகனம் கிறேஷியன் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

சட்டத்தரணிகள் இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் சட்டக் கல்லூரியில் பயிலும் காலத்தில் பல்வேறு திறமைகளையும் வெளிப் படுத்தியதோடு 2006 , 2007 ஆம் ஆண்டுக்கான இலங் கை சட்டக்கல்லூரி தமிழ் மன்றத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் இலங்கை சட்டக்கல்லூரி மனித உரிமைகள் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினராக பதவி வகித்ததோடு சட்ட மாணவர்களால் நடத்தப்படும் பல்வேறு கல்விச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு பங்களிப்புச் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-134)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 5 நாட்கள் பயிற்சிப் பட்டறை

போரூட் நிறுவன நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி வலய கல்வித் திணைக்கள அனுசரணையுடன் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்குள் இயங்கும் 62 முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான 5 நாட்கள் பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பூநகரி மகா வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.செல்வராஜா தலைமையில் நடைபெறும் இப் பயிற்சி வகுப்பில் துறைசார்ந்த வளவாளர்கள் பங்குபற்றி பயிற்சி வகுப்பை நடாத்தி வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் 60 இற்கு மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-84)

## மட்டக்களப்பில் 60ஆயிரம் ஏக்கர் வயல் காணிகள் நீரில் மூழ்கின

(கொழும்பு)

மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக அந்த மாவட்டத்தில் உள்ள 60 ஆயிரம் ஏக்கர் வயல் காணிகள் நீரில் மூழ்கியுள்ளதாக மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. அழிவடைந்துள்ள வயல் நிலங்கள் தொடர்பான விபரங்களை திரட்டி வருவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை, வவுனதீவு, வாகரை, வெல்லாவெளி, கிரான் ஆகிய பிரதேசங்களில் உள்ள நெற் காணிகளே நீரில் மூழ்கியுள்ளன. (ஸ்ரீ-2)

## கிழக்கில் அடைமழைக்கு இரு சிறுவர்கள் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தொடர்மழை வெள்ளம் காரணமாக இரண்டு சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் ஈரலற்குளத்தில் நேற்று முன்தினம் மாலை வீட்டிலுள்ள நீர் குழியொன்றினுள் தவறிவிழுந்த 12 வயதுச் சிறுமியொருத்தியும், அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் வீடொன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் 12 வயது சிறுவனொருவனும் உயிரிழந்துள்ளார்கள்.

சம்பவத்தில் சிறுவனுடன் உறக்கத்திலிருந்த தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளார்கள்.

மழை வெள்ளம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்காவது நாளாக பகலில் மழை ஓய்ந்திருந்தாலும் இரவில் பெய்வதால் தாழ்ந்த பிரதேசங்களில் இன்னமும் வெள்ளம் காணப்படுகின்றது.

இதனால் மக்களின் இயல்பு நிலை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது. கிரான் - புலிபாய்ந்தகல் வீதியில் வெள்ளம் பாய்வதால், புலி பாய்ந்தகல் பிரதேசத்திலுள்ள 3ஆயிரத்து 700 குடும்பங்களுக்கான தரைவழிப்பாதை தொடர்ந்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த இடத்தில் படகுப் போக்குவரத்து சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கிரான் பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்துள்ளார்.

வெல்லாவெளி பிரதேசத்திலும் காக்காச்சிவட்டை -ஆனைகட்டியவெளி வீதியிலும் வெள்ளம் பாய்ந்தோடுவதால் சின்னவத்தை, மாலையர்கட்டு, ஆனைகட்டியவெளி ஆகிய கிராமங்களுக்கான நேரடித் தொடர்பு தற்போது துண்டிக்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பிரதேச செயலாளர் யு. உதயசிறீதர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு சமைத்த உணவுகள் கிடைக்கின்ற போதிலும் ஏனையோருக்கு இதுவரை கிடைக்கவில்லை என பாதிப்பிற்குள்ளானவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

### முன்னாள் பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் இன்று பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதாகவும் அனைத்துப் பொருட்களின் விலைகளும் பெருமளவில் அதிகரித்திருப்பதாகவும் முன்னாள் பிரதமரும் நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இங்கிரியவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

அமைச்சர் ஒருவரது அலுவலகம் பற்றி வினவியபோது தனது அமைச்சு வாகனத்தில் உள்ளதாக அந்த அமைச்சர் தெரிவித்திருந்தார்.ஏதாவதொரு பணியைச் செய்யும் போது திட்டமிட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்பற்ற முறையில் செயற்படுவதன் மூலம் இந்த அரசு குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை இல்லாது போய்விடும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து சற்று சந்தேகம் ஏற்படுகின்றது. இவ்வாறான சிறிய விடயங்களை நிறைவேற்ற முடியாத அரசு பெரிய சவால்களை எவ்வாறு எதிர்நோக்குமென மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படும்.

இந்த அரசாங்கத்தை தோல்வியடையச் செய்யவேண்டிய தேவை எனக்கில்லை. இந்த அரசு மக்களுக்கேயொழிய எனக்கில்லை.

எனவே இந்த அரசை பாதுகாப்பதுடன் ஒவ்வொருவரும் தத்தம் தவறைப் புரிந்து கொண்டு மக்கள் மத்தியில் செயற்பட வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



7



கவிப்பேரரசு வைரமுத்து

தட்டான் பூச்சிகளும்-சில்வண்டுகளும் -ஒரு முனையில் குரல்கேட்டு மறு முனையில் கலைந்தோடும் காடைகளும்-சடக்கென்று புகுந்தோடும் வெள்ளெலிகளும் இரைதேடி வந்துபோன பாம்பின் தடமும்-தலைகாட்டி மறையும் கீரிகளும் சோளக்காடு கொடுக்கும் சொல்லமுடியாத அனுபவங்கள்.

உட்கார்ந்தோ-நின்றோ-ஓடிக்கொண்டோ-அறுத்தால் புல் சேராது; மண்டியிட்டு அறுக்க வேண்டும். முழங்கால் நிலம் பதிய மண்டியிட்டு நகர்ந்தபடி இடக்கை புல்லின் குடுமிபிடிக்க வலக்கை கொண்ட வாங்கருவா தூர் வாங்க பரபரவென்று பாம்பாய் விரையத் தெரிந்தவன் எவனோ அவன்தான் கஞ்சிப்பொழுதுக்குள் வீடுவந்து சேருவான் கட்டோடு.

தரைநீச்சலடிப்பவனாய் மொக்கராசு புல்லறுத்து முன்னேற முன்னேற கூழ்மாயி மோழையன் இருவரும் திட்டமிட்டுப் பின்தங்கி மொக்கராசு அறுத்து வைத்த புல்லில் கொஞ்சம் கொஞ்சம் அள்ளிக் கொண்டிருந்தார்கள் பச்சைத் திருட்டு!

தன் உழைப்பு தன் முதுகுக்குப் பின்னால் திருடப்படுவதைக்கூடக் கண்டு கொள்ளாமல் கருமமே கண்ணாயிருந்தான் மொக்கராசு.

முற்றும் புல்லறுத்து முடித்துவிட்டு, சிதறிக்கிடந்த புல்லையெல்லாம் சேர்த்துக் கட்டியபோதுதான் மொக்கராசுக்குத் தெரிந்தது சோளக்காட்டு ஊழல்.

"ஏய்... இது நல்லால்லப்பா. எம்புல்ல எங்கட்ல சேத்துருங்க" என்றான் மொக்கராசு கோபத்தில் பணிவு குழைத்து.

"ஏலே கூழ்மாயி... இங்க பார்ரா இவன் அறுத்த புல்ல நம்ம கட்டிக்கிட்டமாமில்ல"-மோழையன் பொய்க் கோபத்தில் பொங்கினான்.

"நம்ம கிரகஞ்சரியில்லப்பா"
-சலித்துக்கொண்டான் கூழ்மாயி.

மொக்கராசுக்கு அழுகையாய் வந்தது.

தொண்டைக்குள் யாரோ பம்பரஞ் சுற்று வதாய்ப் பட்டது.

"ஏண்டா மொக்க... எதுக்குடா ஒனக்கு இத்தந் தண்டிப் புல்லுக்கட்டு...?" பேச்சை மாற்றினான் மோழையன்.

"பால் மாட்டுக்கு" என்றான் மொக்கராசு கண் கசக்கி,

"ஒரு பால்மாடுதான ஒங்கவீட்ல. அதுக்கு இது பத்தாதா?"

"அதில்ல கூழ்மாயி. அவுக வீட்டுக்கு இன்னொரு பால்மாடு வரப்போகுதில்ல. அதுக்குஞ் சேத்துத்தான் புல்லறுக்கிறான் மொக்கராசு"

"இன்னொரு பால்மாடா...?"

"இவுக ஆத்த ரெண்டாங்கல்யாணம் பண்ணப் போறாள்ல. பத்தாம் மாசம் பால்குடுக்க மாட்டா...?"

துடித்துப்போன மொக்கராசு தன் வயது மறந்து வலிமை மறந்து "ஏலே வெண்ணெ" என்று கத்திக் கொண்டே மாடுமுட்டும் பாவனையில் ஓடிச்சென்று தன் தலையால் அவன் மார்பில் மோதினான்.

சோளத்தட்டைகளுக்கு மத்தியில் மழையில் குழைந்து கிடந்த செம்மண் நிலத்தில் கீரியும் பாம்பும் சண்டையிட்டதுபோல் கதறிக்கொண்டே அவனோடு கட்டிப்புரண்டு சண்டையிட்டு-"என்னடா சொன்ன... என்னடா சொன்ன.." என்று மோழையன் நெஞ்சில் முட்டி முட்டி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு உருண்டான்.

உடம்பில் ஒட்டிய அட்டையைப் பிரயத்தனம் செய்து பிரித்து எறிவதுபோல் அவனை எறிந்துவிட்டு-"ஒங்க ஆத்தாளுக்குக் கல்யாணமா இல்லையான்னு ஒங்க ஆத்தாளையே போயிக்கேளுடா" சோளக்காட்டுத் தட்டைச் சிட்டுகள் சிதறிப் பறக்கக் கத்தினான் கூழ்மாயி.

புருவம் கிழிந்தொழுகிய ரத்தத்தோடும்-நெஞ்சுடைந்து சிந்திய கண்ணீரோடும்-உடம்பெல்லாம் சாந்துபூசிய சகதியோடும் பாதங்குத்திய நெருஞ்சி முள்ளை உதறவும் கருதாமல் ஓடோடி வீடுவந்து ஆத்தா கடைந்து கொண்டிருந்த தயிர்ப்பானையை ஓங்கி மிதித்து உடைத்துக் கதறிக் கதறி அழுது கேட்டான்:

"ஆத்தா ஒனக்குக் கல்யாணமா...?"

அவன் உடைத்துப்போட்ட தயிர்ப்பானையைவிட நெஞ்சாங்குழி நொறுங்கிப்போனாள் விதவைத்தாய் செல்லத்தாயி.

என்ன சொல்லுவாள் இடிந்துபோனவள்? இந்தப் பிஞ்சுமனசுக்குள் இத்தனை எரிமலை இருக்கும் என்று கண்டாளா? ஐந்தாண்டுகால விதவை வாழ்க்கையில் அவள் தலையணை இல்லாமல் தூங்கியிருக்கிறாள்; தலைமகன் இல்லாமல் தூங்கியதில்லையே. மறுமணம் என்பது குலவழக்கத்தில் வழிவழியாக வந்ததுதானே! வழிமாறிய வழக்கமில்லையே.தன் கழுத்தில் இரண்டாம் தாலி ஏறலாமா இல்லையா என்று மூன்றாண்டுகாலமாய் நெஞ்சோடு சம்மதம் கேட்டாளே... மகனையும் ஒருவார்த்தை கேட்டிருக்கலாமோ?

கூனிக்குறுகி உட்கார்ந்து குலுங்கிக் குலுங்கி அழுதாளவள். அவன் கேட்ட கேள்விக்கு ஆமாம் இல்லையென்று ஒருவார்த்தையும் சொல்லவில்லை. புயல்வந்து கேள்விகேட்டால் பூவரசஞ் சருகு என்ன சொல்லும்?

கள்ளிப்பட்டியைவிடக் காமக்காபட்டி பெரிய ஊர்தான். இங்கே வீடுகள் என்பதென்றால் அங்கே தொண்ணூறு. ஊர்ச்சாவடி-அரசமரம்-ஊருக்குள் கிணறு என்ற கௌரவங்களெல்லாம் காமக்காபட்டிக்கு உண்டு; கள்ளிப்பட்டிக்கு இல்லை.

நூறு முதல் இருநூறு ஆண்டுகளுக்குள் உண்டான ஊர்களாகத்தான் இருக்க முடியும்.

பஞ்சத்தால் துரத்தப்பட்டவர்கள்-கொள்ளை நோய்க்கு அஞ்சி ஓடிவந்தவர்கள்-யுத்தத்தால் விரட்டப்பட்டவர்கள் சாதிக்கலவரத்தில் தப்பித்துவந்தவர்கள். அரசாங்கத்தின் வரை படத்துக்கு வராத வறண்ட நிலங்களில் தாங் களே மண் மிதித்து வீடு கட்டிக் கொண்டார்கள்.அந்தக் குடியிருப்புகள் காலப்போக்கில் குக்கிராமங்கள் என்ற "தேசிய அந்தஸ்து" பெற்றுவிடுகின்றன.

பேயத்தேவர் வகையறாக்களுக்கு மாப்பிள்ளை வீட்டில் கல்யாணம் நடப்பதே மரபு.

"கல்யாணத்துப் பொண்ணு வீட்லயே வச்சுக்கலாம்னுபாக்கறேன்..." என்று பேயத்தேவர் ஒரு கல்லெறிந்தபோது மறுகணமே அதற்கு மாங்காய் விழுந்தது.

"மாமு... ஒங்க இழுவைக்கெல்லாம் நான் வாரேன்; கல்யாணத்த ஒங்க வீட்லயே வச்சுக்குங்க..." என்றான் மாப்பிள்ளை ஒச்சுக்காளை.

கல்யாணம் நடத்தத் தோது இல்லாதபடி காமக்காபட்டியில் அவன் வீடு சந்துவீடு என்பதும் கல்யாணச் செலவு பேயத்தேவர் தலையிலேயே விழட்டும் என்பதுதான் அவனது திடீர்ப் பெருந்தன்மைக்குக் காரணமென்பதை சபையில் எழுந்த ஓய்ந்த ரகசிய அலை சொல்லியது.

அந்த நாளும் வந்தது. பகல் முகூர்த்தமெல்லாம் வசதிப்படாது. அவரவர்கள் வேலை முடித்துக் "காத்தாட" வந்து சேர ராத்திரி கல்யாணம் தான் லாயக்கு.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## எரிக்சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதி மீள் குடியேற்ற அமைச்



சர் விநாயகமூர்த்தி முரளீதரனின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் நோர்வே அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுல் படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் நோர்வே அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காக பாரிய ளவு நிதியை வழங்கியதாக கருணா தெரிவித்தார்.

எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கடந்த காலங்களிலும் கருணா இவ்வாறான குற்றச் சாட்டுக்களை சுமத்தியுள்ளார் எனவும் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக இவ்வாறான பிழையான கருத்துக்கள் முன் வைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடும் நடப்பும் தவறு

முடிதரித் தவரோடு முடி வெடுத்தீர்கள்
முடி வெடுத்தவரை முடி வெடுக்க;
முடிந்தவர் கள்முடி வெடுத்தவர் கள்மட்டுமோ?
முடித்தீர் கள்ளெரித்தீர்க ளக்கினியில்
முக்கனியாய் முத்தமிழை முன்வைக்கும்
மூன்றி லொரு மூத்த குடியினரை
சத்தியமாய் நாமறியோம் கொன்றிடுக மென்பதனை
எள்ளும் காயுது எலி யெச்சமும் காயுது
உன் மஞ்சளை யழித்தது தவறு
கெஞ்சிய யெம்மை யழித்தது மாதவறு
மிஞ்சிய யெமக்குகினிக்கேடு நினையாது தவறு

**அறியாதவன்**

# அநுராதபுர மாநகரசபையின் வரவு-செலவுத்திட்டம் தோல்வி

(கொழும்பு)

அநுராதபுர மாநகரசபை வரவு-செலவுத் திட்ட யோசனையிலும் ஆளும் கட்சி தோல்வியைத் தழுவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்த மாநகரசபை வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பே இவ்வாறு தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடன் இணைந்து ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரும் வரவு -செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளார்.

குறித்த ஆளும் கட்சி மாநகரசபை உறுப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மாதிவெல வீடமைப்புத் திட்டம் தெருநாய்களால் ஆக்கிரமிப்பு

## எம்.பிக்கள் விசனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெல வீடமைப்புத் திட்டத்தைத் தெரு நாய்கள் ஆக்கிரமித்துள்ளதன் காரணமாகத் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகப் பல எம்.பிக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே எம்.பிக்களால் இந்தப் புகார் முன் வைக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்திருந்த வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மாதிவெல வீடமைப்புத் திட்டத்தில் தெரு நாய்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதன் காரணமாக வெளியார் உள் நுழைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

செல்வம் அடைக்கலநாதனின் இதே கருத்தினையே மேலும் பல எம் பிக்களும் அங்கு வலியுறுத்தியிருந்தனர்.

இந்த தெரு நாய் விவகாரம் சபாநாயகரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# புத்தாண்டில் கட்சித் தலைமைப்பொறுப்பை சஜித் பிரேமதாஸ பெற்றுக்கொள்வார்

## தயாசிறி எம்.பி நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் நெருங்கிப் பழகும் உறுப்பினர்களும் சஜித் பிரேமதாசவிற்கு தலைமைப் பதவி வழங்கப் படவேண்டுமென விரும்புவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையினால் எதிர்வரும் புத்தாண்டில் கட்சித் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாஸ பெற்றுக்கொள்வார் என தாம் திடமாக நம்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக்கட்சிப் புதுப்பொலிவுடன் செயற்படும் எனவும் மக்களும் இதனையே விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திவயின சிங்கள பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 2010.12 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1853 - ஐக்கிய அமெரிக்கா தொடருந்து போக்குவரத்துப் பாதை அமைப்பதற்காக மெச்சிக்கோவிடம் இருந்து 76ஆயிரத்து770 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட காட்சென் என்ற இடத்தை 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கியது.

★ 1862 - வட கரொலைனாவில் ஐக்கிய அமெரிக்காவின் மொனிட்டர் என்ற கப்பல் மூழ்கியது.

★ 1870 - ஸ்பெயின் பிரதமர் ஜுவான் பிறிம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1880 - டிரான்ஸ்வால் குடியரசு ஆகியது.

★ 1896 - பிலிப்பைன்ஸின் தேசியவாதி ஸோசே ரிசால் மணிலாவில் ஸ்பானிய ஆதிக்க வாதிகளால் மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்நாள் பிலிப்பைன்ஸில் ரிசால் நாள் என்ற பெயரில் விடுமுறை நாளாகும்.

★ 1903 - சிக்காகோவில் நாடக அரங்கு ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 600 பேர் இறந்தனர்.

★ 1906 - அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சி டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1922 - சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

★ 1924 - யாழ்ப்பாணம் வாலிபர் சங்க மாநாட்டில் சாதி ஒழிப்புத் தீர்மாணம் கொண்டு வரப்பட்டது.

★ 1924 - பலநாள் மீன்பேரடைகளின் இருப்பு பற்றி எட்வின் ஹபிள் அறிவித்தார்.

★ 1941 - மகாத்மாகாந்தி காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.

★ 1943 - சுபாஷ்சந்திரபோஸ் அந்தமான் தீவுகளின் போர்ட் பிளையர் நகரில் இந்திய விடுதலைக் கொடியை ஏற்றினார்.

★ 1947 - ருமேனியாவின் மன்னர் மைக்கல் சோவியத் ஆதரவு கம்யூனிச அரசால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1949 - இந்தியா சீனாவை அங்கீகரித்தது.

★ 1953 - உலகின் முதலாவது NTSC வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஆயிரத்து 175 டொலருக்கு விற்பனைக்கு விடப்பட்டது.

★ 1965 - பேர்டினண்ட் மார்க்கொஸ் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியானார்.

★ 1972 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா வடக்கு வியட்நாம் மீதான குண்டுத் தாக்குதல்களை இடைநிறுத்தியது.

★ 1993 - இஸ்ரேலும் வத்திக்கானும் தூதரக உறவுகளை ஏற்படுத்தின.

★ 1996 - அஸ்ஸாம் மாநிலத்தில் பயணிகள் தொடருந்து ஒன்றில் போடோ தீவிரவாதிகளால் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1997 - அல்ஜீரியாவில் நான்கு ஊர்களில் இடம்பெற்ற வன்முறைகளில் மொத்தம் 400 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2000 - பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் இடம்பெற்ற பல தொடர் குண்டு வெடிப்புகளில் 22 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

★ 2004 - ஆர்ஜென்டீனாவின் புவனஸ் அயரெஸ் நகரில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயினால் 194 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006 - ஸ்பெயினின் தலைநகர் மாட்ரிட் நகரில் அனைத்துலக விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006 - நடுக்கடலில் ஏற்பட்ட புயலில் 850 பயணிகளுடன் சென்ற செனோபதி நுசந்தாரா என்ற இந்தோனேசியக் கப்பல் கடலில் மூழ்கியது.

★ 2006 - முல்லைத்தீவு மாவட்ட கத்தோலிக்க ஆலயத்தால், கடல்கோளால் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்கும் ஆண், பெண் விடுதிகள் மீதும் பொதுமக்கள் வீடுகள் மீதும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

### பிறப்புகள்

★ 1865 - றூடியார்ட் கிப்லிங், இந்தியாவில் பிறந்த பிரித்தானிய எழுத்தாளர், கவிஞர், நோபல் விருதாளர் (இ.1936)

★ 1879 - இரமண மகரிஷி, தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி (இ.1950)

★ 1975 - டைகர் வூட்ஸ், கோல்ஃப் விளையாட்டு வீரர்

★ 1984 - பெல்ரான் ஜேம்ஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

★ 1691 - ராபர்ட் பொயில், அறிவியலாளர் (பி.1627)

★ 1789 - இராயரகுநாத தொண்டைமான், புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் (பி.1738)

★ 1944 - ரொமாயின் ரோலாண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1866)

★ 1947 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலர் (பி. 1861)

★ 1968 - ட்றிகுவே லீ, நோர்வேயின் அரசியல்வாதி (பி.1896)

★ 1988- இசாமு நொகுச்சி,சிற்ப,கட்டடக் கலைஞர் (பி.1904)

**2006-ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேன் தூக்கிலிடப்பட்டார்.(பி.1937)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

**5** சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...

சிறையில் இருந்து வந்ததும் முதல் கூட்டம்.... இன விடுதலைக்காகப் போராடிய தந்தைக்கும் ஈழவிடுதலைக்காக உதவிய தலைவருக்கும் வீரவணக்கம் செலுத்த சென்னையில், எம்.ஜி.ஆர்.நகரில் திரண்டோம்!

முதன் முறையாக எம்.ஜி.ஆர். குறித்து முழங்கினேன். பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை எம்.ஜி. ஆர் எப்படி எல்லாம் பரப்பினார் என்பதை விளக்கிவிட்டு நான் வீட்டுக்கு வருவதற்குள் எக்கச்சக்க விமர்சனங்கள்.....

"எம்.ஜி.ஆரை புரட்சித் தலைவர் என்று சீமான் எப்படிச் சொல் லலாம்? பெரியாரும் எம்.ஜி.ஆரும் ஒன்றா? இன்றைக்கும் எம்.ஜி. ஆருக்காக இருக்கும் கூட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறார் சீமான்!" என்கிற வாதங்கள் ஒரு பக்கம். "எம். ஜி.ஆரை ஆதரித்துப் பேசும்போதே தெரிகிறது..... வரும் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகத்தான் சீமான் செயல்படப்போகிறார்!" என்கிற அனுமானங்கள் ஒரு பக்கம்.



எம்.ஜி.ஆருடன் பிரபாகரன்...

எம்.ஜி.ஆர்.நடித்த படங்களைக் கூட பார்க்கக் கூடாது என மனதுக்குள் சத்தியம் ஏற்றித் திரிந்தவன் நான். திரை உலகுக்கு வருவதற்கு முன்னர் நான் எம்.ஜி.ஆரின் படங்களையே பார்த்தது கிடையாது. அழகு என்கிற ஒற்றை வலிமையைத் தவிர அவரிடத்தில் வேறு எந்த ஈர்ப்பும் இல்லை என நினைத்தவன் நான். ஆனால் அப்படி நினைத்ததற்காக ஈழத்தில் நான் வெட்கப்பட்டு தலை குனிந்து நின்றேன்.

"எம்.ஜி. ஆரை இழந்தது நம் இனத்தின் விடுதலையைத் தள்ளிப் போட்டுவிட்டது. நம் உணர்வுகளையும் உரிமைகளையும் மனமார ஆதரித்த அந்த மனிதரை இவ்வளவு சீக்கிரம் நாம் இழந்து விட்டோமேடா தம்பி!"-அண்ணன் பிரபாகரன் இப்படிச் சொன்ன போது குற்றறிவு கொண்டவனாக நான் குறுகிப்போய் நின்றேன். "எம்.ஜி.ஆர். ஒரு மலையாளி! என தி.மு.க. தலைவர்கள் திரும்பத் திரும்ப சொன்ன வாதங்களை நிஜம் என நம்பி,என் மூளை பழுதடைந்திருந்த நேரத்தில், அண்ணன் சொன்ன வார்த்தைகள் என் சொரணையில் சூடு போட்டன.

தலைவர் பிரபாகரனுடன் மூன்று மணிநேரம் பேசினால், அதில் முக்கால் மணிநேரம் எம்.ஜி. ஆரைப் பற்றியதாகத்தான் இருக்கும்.


"இந்திய அமைதிப் படையை நம்பி நாம் ஆயுதங்களை ஒப்படைத்த நேரம்... நம் ஆயுதங்களை வாங்கிப் போட்டிக் குழுக் களுக்கு கொடுத்து, நமக்கு எதிரான போரைத் தூண்டி விட்டது இந்திய அமைதிப் படை. மொத்தமாக 600 போராளிகள் மட்டுமே அப்போது இருந்தார் கள். 100 போர்கொண்ட குழுக்களாகப் போராளிகளைப் பிரித்து அனுப்பிவிட்டு, நான் களத்தில் நிற்கிறேன். எந்தக் கணத்திலும் எதுவும் நடக்கலாம் என்கிற நிலை 'பிரபாகரனை நெருங்கிவிட்டோம். இனி அவர் தப்பிப்பது கனவிலும் சாத்தியம் இல்லை!' என இந்திய அமைதிப் படை கொக்கரிக்கிறது. எது குறித்து சிந்திப்பதற்கும் கணமற்ற வேளையில் தம்பி கிட்டு ஒரு பெட்டியில் பணத் தோடு வந்தார். மொத்தமாக 36 இலட்சரூபாய். 'தம்பி கஷ்டப் படுவார்... இதை

## மலையாளி யார்?

நான் கொடுத்ததாகச் சொல்லி அவரிடம் கொடு. எதுவும் நடக்காது.தம்பியை தைரியமாகச் இருக்கச் சொல்!' எனச் சொல்லி,எம்.ஜி.ஆர். கொடுத்து அனுப்பிய பணம் என்றார் கிட்டு. நிஜமாகவே என்னைத் தம்பியாக நினைத்தவர் அப்பா எம்.ஜி.ஆர்.!" - அண்ணன் சொல்லச் சொல்ல என்னால் அழுகையை அடக்கமுடியவில்லை. இந்திய அமைதிப்படை அண்ணனை அழித்தொழிக்க நினைத்த வேளையிலும் தேசிய குற்றம் எனத் தெரிந்தும் அண்ணனுக்கு எம்.ஜி.ஆர். உதவத் துணிந்தது என் நெஞ்சத்துத் தசைகளையெல்லாம் துள்ளத் துடிக்க வைத்தன.

'ஈழம் அடைய எவ்வளவடா தம்பி தேவைப்படும்?' என எம்.ஜி.ஆர்.கேட்க,' நூறு கோடி ரூபாய் தேவைப்படும்!'என அண்ணன் சொன்னவுடனேயே,'நான் தர்றேன்... நான் தர்றேன்... நீ நல்லா சண்டை பிடி!' என தைரியம் வார்த்த எம்.ஜி.ஆரைப்பற்றிப் பேசாமல்... வேறு எவரைப்பற்றி ஐயா பேசுவது?

வாய்முழுக்க தமிழ் தமிழ் என முழங்கிவிட்டு, தமிழருக்கே வாய்க்கரிசி போட்டவரைப் பற்றியா பேசச்சொல்கிறீர்கள்? எம்.ஜி.ஆரை புரட்சித் தலைவர் எனச் சொல்வது பலருக்கும் பொறுக்கவில்லை. அன்னைத் தமிழ்மண் அடிமைப்பட்டுக்கிடந்த போது,உலகத்தின் எந்தப் புரட்சியாளர்களுக்கு குறைவு இல்லாத புரட்சியாளன் அண்ணன் பிரபாகரன் போராட்டத்திற்குத் தோள் கொடுத்து துணைநின்ற எம்.ஜி.ஆரை புரட்சித் தலைவர் என்று சொல்லாமல்,வேறு எவரைச் சொல்வதாம்?



அரசியல் இராஜதந்திரியாக இன்றைக்கு அரியணையில் அமர்ந்திருப்பவரிடம் கேட்கிறேன்...ஈழப்போர் தீவிரம் எடுத்த வேளையிலும்,மத்திய அரசுக்கு எதிராக வாய் திறக்காமல்,கூட்டணியை கெட்டியாகப் பிடித்து நாடாளுமன்றத்தேர்தலில் பெரும்பான்மை வென்ற உங்களை அரசியல் சாணக்கியராக புகழாரம் பாடுகிறீர்களே... எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தவரை,ஏன் ஐயா உங்களின் சாணக்கியத்தனம் எடுபடவில்லை?

எம்.ஜி.ஆரின் பெயரைச்சொல்லி வந்த ஜெயலலிதாவையே பத்துவருடங்கள் அரியணையில் உட்கார வைத்தது தானே உங்கள் அரசியல் இராஜதந்திரத்தின்

## கொலையாளி யார்?

மகிமை.

அரைக்கால் சட்டையோடு உங்களின் கூட்டத்தை ஓடி ஓடி வந்து ரசித்தவன்- உங்களின் சாலச் சிறந்த தமிழுக்கு கைதட்டியவன் - காங்கிரஸ் பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், தமிழ் ஈர்ப்பால் உங்களின் தடம் ரசித்து, உதயசூரியனுக்கு ஓட்டுப்போட்டவன் இன்று உங்களைக் கேட்கிறேன்... ஆட்சியே கவிழ்ந்தாலும் பரவாயில்லை என நினைத்து, அமைதிப்படை துவம்சம் செய்த வேளையிலும் அண்ணன் பிரபாகரனுக்கு அள்ளிக்கொடுத்த எம்.ஜி.ஆர். எங்கே... எத்தனை பேர் இறந்தாலும் சரி... 'இருக்கைப்பத்திரம்' என நினைத்து இரு கைகளையும் விரித்துக்காட்டிய நீங்கள் எங்கே?

பெரியாரின் பேரன் எம்.ஜி. ஆருக்கு வால் பிடிக்கிறானே ....' என உங்கள் தரப்பு வசவாளர்கள் கேலி பேசுவார்கள். பகுத்தறிவு பகலவனின் நிஜ வாரிசாக வரித்துக்கொண்ட உங்களைப் பார்த்து அவர்கள் வாய் திறக்காத அதிசயம்தான் எனக்குப் புரியவில்லை.

மஞ்சள்துண்டு கேள்விக்கு இதுவரை நீங்கள் நெஞ்சம் திறந்து பதில் சொல்லவே இல்லை. ஐயா.... ராஜராஜன் கட்டிய திருவுடையார் கோயிலுக்குள் போகும் போதுமட்டும் மஞ்சள் துண்டைக் கழற்றி விட்டு பட்டாடை உடுத்திய ரகசியம் என்ன ஐயா? புட்டபர்த்தி சாய்பாபா உங்கள் வீட்டுக்கு வந்த போது தாயார் தயாளு அம்மாள் நடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினாரே... உங்கள் வீட்டில் இருந்த பெரியாரின் புகைப்படத்தை அன்று மட்டும் பரணில் தூக்கிப்போட்டு விட்டீர்களா? தங்க மோதிரம் கொடுக்கும் சாய்பாபாவை உங்கள் வீட்டிலேயே தங்க வைத்து, வேண்டிய தங்கத்தைப் பெற்றிருக்கலாமே...புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டி முடிக்காதபோதே எந்த ஜோசியக்காரன் சொல்லி ஐயா அவசரமாகத் திறந்தீர்கள்?

வெண்தாடிக் கிழவனின் பேரனாகச் சொல்கிறேன்...ஐயா! நீங்கள் செய்த துரோகத்திற்கு இந்த தமிழ் இனம் எப்படி பதிலடி கொடுக்கப்போகிறது என்பதை நீங்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து கண்கூடாகப் பார்க்க வேண்டும்.

'எம்.ஜி.ஆர். ஒரு மலையாளி' என்று எத்தனையோ முறை இனத்தால் அவரை தமிழனிடம் இருந்து பிரிக்கப்பார்த்தீர்கள். உண்மையில்,மலையாள எம். கே.நாராயணனுக்கும் கன்னடத்து எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கும் கைகொடுத்து ஈழத்தை கருவறுக்கத்துணை போனது யார்?

துக்கமும் தோற்றுப்போன வெட்கமுமாகத்துடிக்கும் தமிழர்களுக்குத் தெரியும்... யார் மலையாளி என்பதும், யார் கொலையாளி என்பதும்!

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 புத்தாண்டு பலன்கள்




(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம் )

உயர்ந்த மனிதரின் சந்திப்பால், ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி வரும்!

*கட்டளையிட்டால் ,செய்யக் காத்திருக்கும் பலபேரை கையில் வைத்திருக்கும் கடக இராசி நேயர்களே!*

புத்தாண்டு உங்களுக்கு பொதுவாழ்வில் ஈடுபட்டு புகழ் குவிய வைக்கும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கப்போகிறது. இராசிநாதன் சந்திரன் வருடத் தொடக்கத்தில் நீச்சம் பெற்று, விரயாதிபதி புதனுடன் கூடியிருப்பதால், ஆதாயம் அதிகம் வந்தாலும், விரயங்களும் அதற்கு இணையாக வந்து கொண்டே இருக்கும்.

மூன்றாமிடத்தில் சனியும், ஆறாமிடத்தில் இராகுவும், பன்னிரெண்டாம் இடத்தில் கேதுவும், சஞ்சரித்தாலும், குருபார்வை ஒன்றே உங்கள் குழப்பங்கள் அகல வழிகாட்டுவதாக இருக்கிறது. இராகு-கேதுகளுக்கு மத்தியில் குரு நீங்கலாக சகல கிரகங்களும் இருப்பதால், சர்ப்ப தோஷத்துடன் இந்த ஆண்டு பிறக்கிறது.

எனவே, சுயஜாதகத்தில் கால சர்ப்ப தோஷம் அமைந்தவர்கள் இந்த ஆண்டு பல நல்ல வாய்ப்புகளைச் சந்திக்க நேரிடும். மேலும், நற்பலன்பெற சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து கொள்வது நல்லது. குரு பார்வை இருப்பதால், "தலைக்கு வந்தது தலைப் பாகையுடன் போயிற்று" என்று சொல்வீர்கள். குரு வழிபாடும் உங்களுக்கு வரும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வழிகாட்டியாக அமையும்.புத்தாண்டில் உள்ள கிரக நிலைகளின் கட்டத்தையும், சுயஜாதகத்தில் உள்ள கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இரண்டும் இணைந்து செயற்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி பரிகாரங்களைச் செய்து பலன் பெறலாம்.

உங்கள் இராசிநாதன் சந்திரனாவார். அவர் பதினைந்து நாட்கள் வளர்ந்து, பதினைந்து நாட்கள் தேயும் கிரகமாகும். எனவே வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும். சந்திரனுக்குரிய எண் இரண்டு. வேகமாக ஓடும் கிரகம் என்பதால், இந்த எண்ணின் ஆதிக்கத்தில் யாரும் பெயர்களை அமைத்துக் கொள்வதில்லை. எனவே, அதன் பாதசார பலமறிந்து சுயஜாதகத்தில் அம்சத்தின் நிலையறிந்து, அதற்குரிய கிரகத்தின் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயர்களையும் அமைத்துக் கொண்டால், உன்னதமான வாழ்க்கை உங்களுக்கு அமையும்.

விதியை மதியால் வெல்லும் ஆற்றல் உங்களுக்கு உண்டு என்று மற்றவர்கள் சொல்வார்கள். காரணம், நல்ல யோசனைகளுக்கு நீங்கள் சொந்தக்காரர்கள். உங்களுக்கு பிடிவாத குணம் மட்டும் இல்லையென்றால், பிறரை அனுசரித்துப் போகும் தன்மை உருவாகி விட்டால், முன்னேற்றப் பாதையின் முதல் படிக்கட்டில் வந்து நிற்க இயலும்.

உங்களுக்கு இந்தப் புத்தாண்டில் குருவின் மாற்றமும், இராகு-கேதுக்களின் மாற்றமும், சனியின் மாற்றமும் எப்படி பலன் கொடுக்கப் போகிறது என்பது பற்றி பார்ப்போம்.

# உங்களுக்கு எப்படி?

**01.01.2011 முதல் 07.05.2011 வரை**

இக்காலத்தில் ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், துன்பங்களில் இருந்து விடுபடப் போகிறீர்கள். வறட்சி நிலை மாறி இனி வளர்ச்சி நிலை மேலோங்கும். அதன் பார்வை பலன் 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவதால், உடல் ஆரோக்கியம் சீராகும். உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்திணைவர். சகோதர ஒற்றுமை பலப்படும். கடல் தாண்டிச் சென்று இருந்த சகோதரர்கள் உங்கள் கடனை அடைக்க உதவி செய்வார்கள். இதுவரை ஸ்தம்பித்து நின்ற காரியங்கள் இனி மளமளவென நடைபெறப்போகிறது.

பஞ்சம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், நெஞ்சம் மகிழ குழந்தைகளின் முன்னேற்றம் தென்படும். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள், பூர்வீக சொத்துகளில் இருந்து கட்டிய வீட்டிற்கு புதுமனை புகுவிழாக்கள் போன்றவற்றை நடத்திப் பார்க்கும் சூழ்நிலை அமையும். குறிப்பாக, கடல் தாண்டிச் செல்லவில்லையே என்று கவலைப்பட்டவர்களும், உடல் உழைப்பு இருந்தும் ஒரு பெரிய தொகையைச் சேர்க்க முடியவில்லையே என்று சிந்தித்தவர்களுக்கும் இப்பொழுது விடிவுகாலம் பிறந்து விட்டது.

**08.05.2011 முதல் 31.12.2011 வரை**

இக்காலத்தில் குருப்பெயர்ச்சி நடைபெறப்போகிறது. அதன்பின்னர் இராகு-கேது பெயர்ச்சியும், அதைத் தொடர்ந்து சனிப் பெயர்ச்சியும் நடைபெற உள்ளது. இந்த மூன்று பெயர்ச்சிகளின் விளைவாக, முன்னோக்கி செல்லப் போகிறீர்களா? இல்லை பின்னோக்கிச் செல்லப் போகிறீர்களா? என்பதை கிரகங்களின் நின்ற இடத்துப் பலன்களும், பார்க்கும் இடத்தின் பார்வை பலனும் தான் தெளிவாக எடுத்துரைக்கும். குருப் பெயர்சியின் விளைவாக உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன.

பத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால், பதவி மாற்றங்கள், ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் போன்றவைகள் பெயர்ச்சிக்கு முன்னதாகவே வந்து சேரலாம். குடும்பத்தில் கொடி கட்டிப் பறந்த குடும்ப பிரச்சினைகள் சுமுகமாக முடியும். வேற்று மனிதர்களின் தொல்லைகள் விலகும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

சுக ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் பயணங்கள் அதிகரிக்கும். வாகனயோகம் வந்து சேரும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனங்களை வாங்க முன் வருவீர்கள். வீடு கட்டுவதில் இருந்த தடை அகலும். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தாயின் உடல் நலம் தேறும். பாயில் படுத்த தாய் நோயிலிருந்து குணமாகி செயல்படத் தொடங்குவார்.

எதிரிகள் விலகி இனிமை சேர்ப்பர். உத்தியோகத்தில் உயர்வும், ஊதியத்தில் உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். அரசு வழிச் சலுகைகளும், கடனுதவிகளும் கைகூடி வரும் நேரமிது. என்ன இருந்தாலும், பத்தாமிடத்துக் குருவால் முத்தான வாழ்க்கை அமைய குரு கவசம் பாடி, குருவை வழிபாடு செய்வது நல்லது.

மே மாதம் 16ஆம் திகதி விருச்சிக இராசியில் இராகுவும், ரிஷப இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள்.ஐந்தாமிடத்தில் இராகுவும், பதினொராம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். இதன் விளைவாக, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். பூர்வீக சொத்துகளில் இருந்த தகராறுகள் அகலும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் விலகிச் சென்ற ஒருவர் விரும்பி வந்திணைந்து பாதியில் நின்ற பணியை மீதியும் முடித்துக் கொடுப்பார். தடம் மாறிச்சென்ற பிள்ளைகள் தானாகவே உங்கள் வழிக்கு வரலாம். கேது பலத்தால் பழைய தொழிலை கைவிட்டு விட்டு, புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும். வெளிநாட்டுத் தொடர்பால் விரும்பிய லாபம் குவிக்க எண்ணிய நீங்கள், விசா கூட இன்னும் கிடைக்க வில்லையே என்று ஏங்கிய காலம் இனி மாறும். உறவினர் பகை அகன்று, உற்சாகத்தோடுச் செயல்படத் தொடங்குவீர்கள்.

பார்க்கும் குருவைப் பலப்படுத்த தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள். சர்ப்ப சாந்தியை முறையாகச் செய்வதோடு, துர்க்கை வழிபாட்டையும், செவ்வாய்க்கிழமை தோறும் மேற்கொள்வது நல்லது. துர்க்கை பதிகம் பாடினால் துயரம் தீரும்.

டிசம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக, அதன் பார்வை உங்கள் இராசியையும், உங்கள் இராசிக்கு 6, 10 ஆகிய இடங்களையும் பார்க்கிறது. இதன் விளைவாக, விஸ்வரூபம் எடுத்த பிரச்சினைகள் வேகமாக முடிவடையும். ஆரோக்கியத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். வருமுன் காப்போம் திட்டத்தைப் போல, நோய் வருவதற்கான அறிகுறி தோன்றும் பொழுதே நல்ல மருத்துவரை நாடுவது நல்லது. அதன் பார்வையால், சொத்துக்கள் வாங்குவதில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். எனவே, பத்திரங்களை சரிபார்த்து வாங்குவது நல்லது. தொழில் மாற்றச் சிந்

**சிவல்புரிசிங்காரம்**

தனைகள் மேலோங்கும். தொழில் கூட்டாளிகள் விலகிச் செல்ல முன்வருவர். இருப்பினும், உங்கள் இராசி சந்திரபலம் பெற்ற இராசி என்பதால், உடனடியாக புதிய கூட்டாளிகள் வந்திணைந்து உறுதுணை புரிவர். சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெற மந்தனாம் மகரவாசனை கவசம் பாடி, கை தொழுது வழிபட்டு வாருங்கள். காகத்திற்கு சோறு கைப்பதன் மூலம் தேக ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளலாம். (தொடரும்)



அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் குருநகரில் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தை சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா,பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் சுற்றாடல் அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா ,சுற்றாடல் பிரதி அமைச்சர் அப்துல்காதர்,அரசாங்க மரக்கூட்டுத்தாபன தலைவர் எஸ்.அமரசிங்க ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆண்டின் சிறந்த மனிதராக பேஸ்புக் நிறுவனர் தெரிவு



ஆங்கில இதழான டைம், ஆண்டு தோறும், அந்த ஆண்டின் சிறந்த மனிதராக ஒருவரைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கும். இந்த ஆண்டில், இந்தப் பத்திரிகை, சிறந்த மனிதராக,பேஸ்புக் நிறுவனரான மார்க் ஸக்கர் பெர்க்கினை அறிவித்துள்ளது. இவர் உலகில் வாழும் மிக இளவயது கோடீஸ்வரர்களில் ஒருவர். டைம் பத்திரிகை தேர்ந்தெடுத்து அறிவிக்கப்பட்ட ஆண்டின் சிறந்த மனிதர்களில், 1927 ஆம் ஆண்டிற்குப் பின் அறிவிக்கப்பட்டவர்களில் மிகக் குறைந்த வயதுடையவரும் இவரே. பிரிட்டன் மகாராணி எலிசபெத் இதேபோல 1952 ஆம் ஆண்டில் அறிவிக்கப்படுகையில் இளவயதுடையவராகவே இருந்தார்.ஆனால், ஸக்கர்பெர்க் அவரைக் காட்டிலும் வயதில் இரண்டு வாரங்கள் குறைவாகவே உள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. டைம் இதழ், மனித சமுதாயப் பண்பாட்டில் மிகப் பெரிய அளவில் தாக்கத்தினை ஏற்படுத்தியவருக்கு இந்தப் பெருமையை ஆண்டுதோறும் தருகிறது. சமுதாயத்தின் மீதான இந்த தாக்கம், நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கலாம். 2007 ஆம் ஆண்டில் ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டின், 2008 ஆம் ஆண்டில் பராக் ஒபாமா இந்தப் பெருமையைப் பெற்றனர். நாம் அனைவரும் நம் வாழ்க்கையை எப்படி வாழ்கிறோம் என்பதில் மாற்றங்களைக் கொண்டு வந்தவர் என்று மார்க் ஸக்கர் பெர்க்கினைப் பாராட்டியுள்ளது டைம்இதழ். ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்தில், தன் 19 ஆவது வயதில் ,பேஸ்புக் இணையத் திட்டத்தினை ஸக்கர் பெர்க் தொடங்கினார். இன்றைக்கு ஏறத்தாழ 55 கோடி மக்களைக் கொண்டதாக பேஸ்புக் இயங்கி வருகிறது. ஸக்கர் பெர்க் இந்தப் பாராட்டினைத் தன்னுடன் பணியாற்றும் சிறிய குழுவினருக்கு சமர்ப்பித்துள்ளார். இந்தக்குழுவின் உழைப்பு தான், உலகை விரியவைத்து, பல கோடி மக்களை இணைத்துள்ளது என்றும் கூறியுள்ளார். இதில் ஒரு பகுதியாகத் தான் இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஸக்கர் பெர்க்கின் தயாள குணமும் இந்தப் பெருமையை அடைவதற்கு வழி வகுத்திருக்கலாம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் நியூ ஜெர்ஸி பாடசாலை இயகத்திற்கு,ஐந்து ஆண்டுக் காலத்தில்,10 கோடி டொலர் தருவதாக வாக்குறுதி வழங்கினார்.


# கீ போர்டில் 'கீ' களை மாற்றுவதற்கு!

கணனி கீ போர்டில் நீங்கள் அனைத்து கீகளையும் பயன்படுத்துகிறீர்களா? இந்த கேள்விக்கு நாம் அனைவருமே சிறிதுநேரம் யோசித்துவிட்டு சில கீகளைப் பயன்படுத்துவதில்லை என்று தான் சொல்வோம். ஒரு சிலர் கப்ஸ் லொக், ஸ்குரோல் லொக், பாஸ்/பிரேக் வலது விண்டோஸ் கீ அருகே உள்ள மெனு கீ போன்றவற்றைப் பயன்படுத்துவதே இல்லை. ஏன் இந்த கீகளைப் பயன்படுத்தவில்லை என்றால் வேறு சில செயற்பாடுகளுக்கு இந்த கீகளைப் பயன்படுக்கலாமே என்று நமக்கு எண்ணம் தோன்று கிறதா? ஆமாம் செய்திடலாமேஎன்றும் ஆசை வருகிறது. ஆனால் எப்படி? எப்படி ஒரு கீயினை நம் விருப்பத்திற்கேற்றபடி செயல்பட அமைப்பது? ஒரு வழி ரெஜிஸ்ட்ரியை மாற்றுவது. ஆனால் பொதுவாக அதில் மாற்றங்களை ஏற்படுத்துகையில் தப்பாக ஏதாவது செய்துவிட்டால் பின்னர் கணனி இயங்கா நிலை ஏற்பட்டு விடும். இந்த சிக்கல்களில் உங்களுக்கு நல்லதொரு தீர்வைத் தரும் புரோகிராம் ஒன்று ஷார்ப் கீஸ் (Sharp keys) என்ற பெயரில் கிடைக்கிறது. இந்த புரோகிராம் மூலம் எந்த் கீயிலும் இன்னொரு கீயின் செயல்பாட்டை அமைத்திடலாம். அதுவும் மிக எளிதாகவும் வேகமாகவும். நான் இந்த புரோகிராம் மூலம் எஸ்கேப் கீயினை கப்ஸ்லொக். கீயாக மாற்றினேன். பின்னர் மீண்டும் அதனைப் பழையபடியே மாற்றி அமைத்தேன். இதே போல இந்த புரோகிராம் மூலம் எந்த கீயின் செயல்பாட்டினையும் மாற்றி அமைத்திடலாம். அது மட்டுமன்றி ஒரு கீ எந்த செயல்பாட்டினையும் மேற்கொள்ளாமல் செயல் இழந்த கீயாகவும் அமைத்திடலாம். கீ ஒன்றில் அப்ளிகேஷன் ஒன்றையும் செட் செய்திடலாம். அல்லது போல்டர் ஒன்றையும் அமைத்திடலாம். எடுத்துக்காட்டாக வொல்யூம் ஏறாமல் இருக்க ஒரு கீயை நான் அமைத்தேன். ஒரு கீயில் மை டொகுமென்ட்ஸ்போல்டரை அமைத்தேன். அந்தக் கீயினை அழுத்தியவுடன் மை டொகுமென்ட் போல்டர் விரிந்தது. ஆனால் எந்த மாறுதலை ஏற்படுத்திய பின்னரும் அதற்கேற்ப ரெஜிஸ்ட்ரியில் மாறுதல் செய்திட வேண்டும். அந்த வேலையை இந்த ஷார்ப் கீஸ் புரோகிராம் மேற்கொள்கிறது. எனவே கீ அமைப்பை மாற்றியபின் ரெஜிஸ்ட்ரியில் மாற்றங்களை அழுத்துவதற்கான கீயையும் அழுத்திய பின்னர் மீண்டும் கணனியை பூட் செய்தால் தான் இந்த மாற்றங்கள் அமுல்படுத்தப்படும். இல்லையேல், அடுத்தமுறை கணனியை இயக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும். இந்த புரோகிராமினைப்பெற http://www.randy rants.com/2006/07/sharpkeys 211. html என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச்செல்லவும்.



# தானாக இயங்கும் புரோகிராம்களை நீக்குவதற்கு!

கணனி வாங்கி சில மாதங்கள் கழித்து நாம் அனைவரும் எதிர்கொள்ளும் ஒரு அனுபவம், கணனி மிக மெதுவாக இயங்குகிறது என்பதுதான். இதற்குக் காரணம் விண்டோஸ் இயக்கத்தை நாம் தொடங்குகையில், பல புரோகிராம்கள் தானாக இயங்கத் தொடங்குகின்றன. நாம் பல சொப்ட் வெயார் புரோகிராம்களை இன்ஸ்டோல் செய்கையில், பல புரோகிராம்கள், சிஸ்டம் இயங்குகையிலேயே தொடங்கும்படி பதியப் படுகின்றன. அதுமட்டுமன்றி, முதன்மை புரோகிராம் மட்டுமன்றி, ஒரு சில கூடுதல் புரோகிராம்களும் பதியப்படுகின்றன. ஒரு சில மட்டுமே, தானாக சிஸ்டம் இயக்கத்துடன் தொடங்கவா என்று கேட்டு நம் அனுமதியைப் பெறுகின்றன. இவை விண்டோஸ் இயக்கத்திற்கு தேவையா என்றால், நிச்சயமாக இல்லை என்றுதான் கூறவேண்டும். உங்கள் பேர்சனல் கணனி இயங்கத் தொடங்குகையில் என்ன என்ன புரோகிராம்கள் விண்டோஸ் இயக்கத்துடன் ஒட்டிக்கொண்டு இயங்கி, ரம் நினைவகத்தின் இடத்தை எடுத் துக்கொள்கிறன என்று அறிய வேண்டுமா? இதற்கு மைக்ரோ சொப்ட் நிறுவனம் சிறிய புரோ கிராம் ஒன்றைத் தருகிறது.






அதன் பெயர்.ஓட்டோ ரன்ஸ் (Auto runs).

இதனை http://tec hnet.imcrosoft. com/enus/sysi nternals/bb963902 என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து டவுண் லோட் செய்து பதிந்து இயக்கலாம்.

இவ்வாறு இயக்குகையில், நீங்கள் இதுபோன்ற புரோகிராம் எதனையும் இயக்கிப் பார்க்காதவராக இருந்தால், மிகவும் ஆச்சரியம் அடைவீர்கள். சாதாரணமாகப் பயன்படுத்தும் கணனி ஒன்றில் 100க்கும் மேற்பட்ட தானாக இயங்கும் புரோகிராம்கள் இயங்கிக் கொண்டிருப்பதனைப் பார்க்கலாம்.

இவற்றில் 20முதல் 50% வரை, கணனி இயங்கும்போது தேவையற்றதாகத்தான் இருக்கும்.தானாக இயங்கும் புரோகிராம்கள் பட்டியலிட்டவுடன், நீங்களாகவே எந்த புரோகிராம்கள் நம் இயக்கத்திற்குத் தேவையில்லை என அறிந்து கொள்ளலாம்.

இவற்றை கொண்ட்ரோல் பனல் சென்று Add/Remove Programs வழியாக நீக்கலாம். Autoruns போலவே ஆகிய Silent Runners (http://www. silentrunners.org/) மற்றும்HiJackthis (http://free.antivirus. com/hijackthis/) புரோகிராம்களும் இவ்வகையில் நமக்குத் தானாக இயங்கும் புரோகிராம்களைக் காட்டிக் கொடுக்கும்.

(வளரும்)

# விண்டோஸ் 7 மாறப் போறீங்களா!




*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

◣ தற்போது பயன்படுத்தப்படும் பெரும்பாலான 32 பிட் அப்ளிகேஷன் புரோகிராம்கள், 64 பிட் சிஸ்டத்தில் தொடர்ந்து இயங்கும்.ஆனால் சில அப்ளிகேஷன்கள் இயங்காநிலை அல்லது (32 பிட் சிஸ்டத்தில் இயங்கும் வேகத்தைக் காட்டிலும்) மிக மிக மெதுவாக இயங்கும் நிலை ஏற்படும்.

◣ விண்டோஸ் 64 பிட் எடிஷன்களில், விண்டோஸ் 7 இன்ஸ்மேலேஷன் ஹார்ட் டிரைவில் சற்றுப் பெரிய அளவில் அமையும்.விண்டோஸ் 7,32 பிட் எடிஷன்களுக்கு, மைக்ரோசொப்ட் 16 கிகா பைட் ஸ்பேஸ் இருக்க வேண்டும் என வரையறுத்துள்ளது. 64 பிட் எடிஷன்களுக்கு 20 கிகா பைட் இடம் இருக்கவேண்டும் எனக் கூறியுள்ளது.

மேலே கூறியுள்ள தகவல்கள் இன்னும் உங்களுக்கு ஒரு தெளிவைத் தரவில்லை என்றால், உங்களிடம் உள்ள, நீங்கள் ஏற் கனவே பயன்படுத்தும், கட்டாயமாக நீங்கள் தொடர்ந்து பயன்படுத்த வேண்டிய அப்ளிகேஷன் புரோகிராம்களின் தன்மைகளைக் குறித்துக்கொண்டு, பின் மேலேகூறப்பட்டுள்ளவற்றை இணைத்துப் பார்த்தால் தெளிவு கிடைக்கும்.

இருப்பினும் சுருக்கமாக ஒரு முடிவிற்கு வரலாம். உங்கள் கணனியில் உள்ள சிபியு விண்டோஸ் 64 பிட் எடிஷனுக்கு இணைவாக இயங்குவதாக இருந்தால், உங்கள் கணனியின் ரம் மெமரியை 4 கிகாபைட் அல்லது கூடுதலான அளவிற்கு உயர்த்துவதாக இருந்தால், 64 பிட் விண்டோஸ் எடிஷன் இன்ஸ்டோல் செய்திடலாம்.

ஆனால், நீங்கள் இன்னும் பழைய 16 பிட் சொப்ட்வெயார் அப்ளிகேஷன் தொகுப்புக்களைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையில் இருந்தால், அல்லது அந்தக் காலத்து கணனிகளைப் பயன்படுத்தும் கட்டாயத்தில் இருந்தால், விண்டோஸ் 32 பிட் சிஸ்டம் இன்ஸ்டோல் செய்திடலாம்.

இன்னம் தெளிவு வேண்டும் என்றால், கீழ்க்காணும் தலைப்புகளில் இணையத்தில், மைக்ரோசொப்ட் தளங்களில் கிடைக்கும் குறிப்புகளைப் படிக்கலாம்.

தலைப்புகள்:

Windows 7 Upgrade Advisor
Windows 7 Compatibility Center
Windows 7 Application Compati bility List

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான நல்லுறவு வலுப்படுத்தப்படவேண்டும்

## முன்னாள் பிரதிமேயர் எம்.ஜி.பஷீர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையே நல்லுறவு வலுப்படுத்தப்படவேண்டுமென சமாதான நீதவானும் முன்னாள் பிரதி மேயருமான எம்.ஜி.பஷீர் வலியுத்தியுள்ளார்.

அண்மையில் சோனகத்தெருவில் உள்ள முஸ்லிம் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாம் 1990 ஆம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டப்பட்டோம். நாம் அகதிகளாகப்பட்ட போது எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருந்தோம்.

வதிவதற்கு இடமில்லாமல் இருந்த போது இவ் 20 ஆண்டுகாலப்பகுதியில் நாம் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தோம் என்பதை வார்த்தையால் வர்ணிக்க முடியாது. ஆனாலும் போர் ஓய்ந்து சமாதான காலத்தில் மீண்டும் நாம் மீள் குடியமர்த்தப்பட்ட போது எம்மை வரவேற்ற யாழ். மாவட்ட அரச அதிபருக்கு நான் நன்றிக்கடன் உடையவனாக இருக்கின்றேன்.

நாம் குடியிருப்புக்காக இங்கு வந்த போது எமது காணிகளை ஏமாற்றி தமிழ் சகோதரர்களுக்கு தரகர்கள் விற்றுள்ளனர். இதற்கான உறுதி எம்மிடம் இருக்கும் போது போலியான உறுதிகளைக் காட்டி தமிழ் சகோதரர்களுக்கு எமது காணிகள் விற்கப்பட்டுள்ளது.

இதனால் தமிழ் சகோதரர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். போலியான காணி உரிமைப் பத்திரங்களை விற்ற தரகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்தோடு காணிகளை வாங்கும் தமிழ் சகோதரர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இங்கு வந்த போது தமிழ் சகோதரர்கள் எம்மை அந்நியர்களாகப்பார்க்கின்றனர். 20 ஆண்டு காலப்பகுதிக்கு முற்பட்ட காலத்தில் தமிழ் சகோதரர்களுடன் நாம் எவ்வாறு ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்தோம் என்பதை பேராசிரியர் சு.வித்தியானந்தன் முஸ்லிம் மக்களுக்கு என எழுதிய பல நூல்கள் சான்றாகும்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தமிழ்,முஸ்லிம் உறவுகள் என்பது பிரிக்கப்பட முடியாதவாறு இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்தது. தற்போது இவ் உறவை மேம்படுத்த முஸ்லிம் பிரதிநிதிகளை தமிழ் நிகழ்வுகளுக்கு அழைத்தல்,வீதி நாடகங்கள்,கலை நிகழ்வுகளை நிகழ்த்துவதால் 20 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் இருந்த ஓர் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி விட முடியும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட வடுக்களை நாம் மறந்து சினேகமுடன் வாழ விரும்புகிறோம். அத்தோடு வட மாகாணத்திற்கு வெளியே வாழ்கின்ற வடமாகாண முஸ்லிம் மக்களை பதிவு செய்வதற்கான கால எல்லை இம்மாதத்துடன் நிறைவடையவுள்ளது. எனவே இப்பதிவுக்கான கால எல்லையை நீடிக்க வேண்டும். அத்தோடு தேர்தல் காலப்பதிவுகளுக்கான கால எல்லையையும் நீடிக்க வேண்டும். இதுவே நாம் கேட்கும் வேண்டுகோளாக இருக்கிறது என அவர் தெரிவித்தார். (ஶ்ரீ-4)

## அலரிமாளிகைக்கு அருகில் நடமாடிய தமிழ் இளைஞர் கைது

அலரி மாளிகை அமைந்துள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப இளைஞன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சஞ்சய் ரவிதரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இங்கிலாந்தில் வசிக்கும் அவர் இங்கிலாந்து , இலங்கை இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ளவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இங்கிலாந்தின் விமான நிலையம் ஒன்றில் அவர் விமான பொறியியல் எஞ்சினியராக கடமையாற்றுவதும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகமான அலரிமாளிகை அருகில் பேரைவாவியில் நீர் மாதிரிகளைச் சேகரித்து அசுத்த நீர் சம்பந்தமான ஆய்வொன்றை மேற் கொள்வதற்காகவே தான் அங்கு வந்தாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் அவர் எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஶ்ரீ-2)

## பகிடிவதை ஒழிப்புக்கு விசேட புலனாய்வுக்குழு

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழக புதிய மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் பகிடிவதையை ஒழிப்பதற்கு விசேட புலனாய்வுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்குள்ளும் வெளியிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் பகிடிவதையை ஒழிப்பதற்கு பொலிஸாரின் உதவியுடன் விசேட புலனாய்வுக்குழுக்கள் நியமிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.முகமது இஸ்மாயில் தெரிவித்தார்.

புதிய கல்வி ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் மீது சிரேஷ்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே பல்வேறு இடங்களில் வைத்து பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக தகவல் கிடைத்ததையடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய மாணவர்களை வரவேற்பதாகக் கூறி அவர்களை பாடசாலைகள், பொதுஇடங்கள், விழா மண்டபங்கள் போன்ற இடங்களில் வரவேற்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு அவ்விடங்களிலும் மற்றும் பஸ்தரிப்பு நிலையங்கள், பஸ்வண்டிகள் போன்ற இடங்களிலும் பகிடிவதையில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வெளியிடங்களில் எங்காவது பகிடிவதை சம்பவங்கள் இடம்பெறுவதாக அறிந்தால் பல்கலைக்கழக சமூகமும் பெற்றோரும் சமூக நலன் விரும்பிகளும் உடன் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு கேட்டுள்ளனர்.

பகிடிவதையில் ஈடுபடுவதாக நிரூபிக்கப்பட்டால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதோடு மாணவ அங்கத்துவமும் பறிக்கப்படலாம் என குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ-2)

## தெங்குப் பயிற்செய்கைக்கு உரமானியம் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

தெங்குக்கும் உரமானியம் வழங்க தெங்குப் பயிற்செய்கை சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதன் படி அடுத்த வருடம் முதல் 50 கிலோ கிராம் தெங்கு உரத்தை ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெங்குப்பயிற் செய்கை சபை தலைவர் சரத் கீர்த்திரத்ன தெரிவித்தார்.

தற்பொழுது 50 கிலோ கிராம் தெங்கு உரம் 3 ஆயிரம் ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

தெங்கு உற்பத்தி குறைவடைந்து தேங்காய் விலைகள் அதிகரித்துள்ளதை அடுத்து தெங்குப்பயிற்செய்கைக்காக உரமானியம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் உயர் மட்டக்குழு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதன் போதே தென்னைக்காக உரமானியம் வழங்குவது குறித்து ஆராயப்பட்டது.

அமைச்சரவை அனுமதி கிடைத்த பின்னர் உரமானியத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

தென்னைக்கு உரமானியம் வழங்குவது தொடர்பில் நேற்று முன்தினம் திறைசேரி அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டதாக தெங்கு பயிற்செய்கை சபைத் தலைவர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

மட்டக்களப்பில் வெள்ளத்தினால் 55 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மக்களுக்கு உதவ அகில இலங்கை இந்து மாமன்றம் முன் வந்துள்ளது.

இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் மூலம் நிவாரண உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக முகாம்களில இருக்கும் சுமார் 750 குடும்பங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அங்கத்துவ இந்துமா மன்றத் தலைவர் பவளகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமையை அகில இலங்கை இந்துமா மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்தே இந் நிவாரணம் வழங்கப்பட இருக்கின்றது.

தொடர்ந்தும் கடும் மழை தொடர்வதனால் மக்கள் மேலும் பாதிக்கப்படுவர்.

எனவே இந் நிவாரணப்பணிக்கு உதவவிரும்பும் கருணை உள்ளங்கள் பணமாக உதவி செய்யுமாறும் உதவி செய்ய விரும்புவோர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் 0112434990 என்ற இலக்கத்திலும் அல்லது பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்துடன் 011 2434990 என்ற தொலைபேசி இலக்கத்திலும் அல்லது யாழ்ப்பாணத்தில் மாமன்ற அலுவலகத்துடன் 021222 1075 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந் நிவாரணப் பணிக்கு நிவாரணங்களை வழங்கி உதவுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி இந்துமா மன்றத்தினால் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-4)

## முன்பள்ளி கலை விழா

ஶ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்தக் கலை விழா இன்று வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு முன்பள்ளி முன்றலில் சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி ஆகியவற்றின் தலைவர் ச.க.முருகையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் ,சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி.அ. மிலாசினி,வலி கிழக்குப் பிரதேச செயலாளர் த.நடராசா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ,வலி. கிழக்குப்பிரதேச சபை பொறுப்பதிகாரி பே.சுகுமார், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் , நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன்,நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம்,அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ச.வேலழுகன், மழலைகளின் தாய் ந.ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-2)


## பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை
## பதவி வெற்றிடம்

பதவி : தொழிலாளி 318/17
சம்பள அளவுத்திட்டம் (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்றுநிருபத்திற்கு அமைய
318/17 சம்பளக் குறியீடு

8950 - 10300
65× 10 - 70× 10

வயது :- 18 - 45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
பிணை:- 3000/= (மூவாயிரம்)
தகைமைகள்:- 5ஆம் தரம் சித்தியுடன் நல்ல தேகாரோக்கியம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

பொது நிபந்தனைகள்:-
01. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02.சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
03. விண்ணப்பத்தினை ரூபா 10/= செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 14/01/2011

உள்ளடக்கப்பட வேண்டியவை
01. பிறப்புச்சான்றிதழ் 02. கல்வித்தைமைச்சான்றிதழ் 03.தொழில் தகைமைச் சான்றிதழ் 04. நற்சான்றுப் பத்திரங்கள் இரண்டு ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தலைவர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழிலாளருக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு நேரிலோ, தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(சி-1997)

தலைவர்,
பரு.ப.நோ.கூ சங்கம்,
பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கத்தியும் புத்தியும்

ஒரு திருடன் ஒரு வீட்டில் போய் திருடவேண்டும் என்று திட்டம் போட்டான்.

இருட்டியதும் திருடவேண்டும். ஆனால் இரவில் வாசல் கதவை சாத்தி உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டு விடுவார்களே.... என்ன செய்வது?எப்படி வீட்டுக்குள் போவது? என்று யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.

"சரி, பகல் நேரத்திலேயே யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டுக்குள் நுழைந்து விடுவோம். அங்கேபோய் எங்கேயாவது ஒளிந்து கொள்வோம். இருட்டும் வரை பேசாமல் இருப்போம்.

இரவு எல்லோரும் தூங்கியபின் மெதுவாகப் போய் பீரோவைத் திறந்து இருக்கிறது முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்" என்று திட்டம் போட்டான்.

அதேபோல் ஒருநாள் பின்னேரம் அந்த வீட்டுக்காரன் எங்கேயோ வெளியில் புறப்பட்டுப் போனான். வீட்டுக்கார அம்மா சமையறைக்குள் நின்று சமைத்துக் கொண்டிருந்தார்.

திருடன் பார்த்தான். இதுதான் சமயம் என்று அந்த வீட்டுக்குள் மெதுவாக நுழைந்து விட்டான்.

எங்கே ஒளியலாம் என்று பார்த்தான். வலது பக்கம் ஒரு அறை இருந்தது. அது படுக்கையறை. அங்கேயிருந்த பெரிய கட்டிலுக்கடியில் போய்ப் பதுங்கிக் கொண்டான்.

இருட்டியதும் நம்முடைய வேலையை ஆரம்பிப்போம். அது வரைக்கும் பொறுமையாக இருக்கவேண்டும்" என்று சொல்லி பேசாமல் வாயை மூடிக்கொண்டு கம்மென்று இருந்து விட்டான்.

நீண்டநேரம் கழித்து வெளியே போயிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்தான், சாப்பிட்டான். லைற்றை நிறுத்தி விட்டு படுத்து விட்டான்.

அந்த அம்மாவும் வேலையெல்லாம் முடித்துவிட்டுத் தூங்கி விட்டார்.

நள்ளிரவு நேரம் விடிவிளக்கு இலேசாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரன் மெதுவாக கண்முழித்தான். கட்டிலுக்கு நேராக எதிரில் ஒரு கண்ணாடி இருந்தது. அதில் பார்த்தான். கட்டிலுக்கு கீழே ஒரு திருடன் ஒளிந்திருப்பது தெரிந்துவிட்டது.

உடனே அவன் "திருடன் திருடன்" என்று சத்தம் போடவில்லை. மேசையில் இருக்கும் கத்தியை கையில் எடுத்து வைத்துக் கொள்வோமா? என்று யோசித்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் கத்தியை உபயோகப்படுத்துவதைவிட புத்தியை உபயோகப்படுத்துவதுதான் சாமர்த்தியம் என்று நினைத்தான். உடனே அதன்படி செயற்பட ஆரம்பித்தான்.

எதையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் மிகவும் சர்வ சாதாரணமாக தன் மனைவியிடம் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்திசாலி. அதனால் அவளும் வீட்டுக்காரர் கேட்ட கேள்விக்குப் பொருத்தமாக பதில் சொன்னாள்.

இவன் கேட்டான்:

"இதோ பார்... நமக்குக் குழந்தை பிறந்தால் அதற்குக் கிருஷ்ண மூர்த்தி என்றுதான் பெயர் வைக்க வேண்டும்" என்றான்.

"அதெல்லாம் முடியாது. ஆண் குழந்தையாக இருந்தால் ஏகாம்பரம் என்றும் பெண் குழந்தையாக இருந்தால் பங்கஜவல்லி என்றும் பெயர் வைக்க வேண்டும்" என்றார் அந்த அம்மா.

"அதெல்லாம் முடியாது. நான் முடிவு செய்து விட்டேன். கிருஷ்ணமூர்த்தி" என்று கத்தினான் அவன்.

"ஏகாம்பரம், பங்கஜவல்லி– ஏகாம்பரம் பங்கஜவல்லி" என்று கத்தினாள் மனைவி.

ஒரே சத்தமாகிவிட்டது.

இதைக் கேட்டதும் பக்கத்து வீட்டில் – எதிர்வீட்டில் இருந்தவர்களெல்லாம் எழுந்து ஓடிவந்து இவர்களுடைய வீட்டைத் தட்டினார்கள்.

இவன் சாவகாசமாக எழுந்து போய் கதவைத் திறந்தான்.

"என்ன... இந்த இரவு நேரத்தில் எங்களையெல்லாம் ஏன் கூப்பிட்டீங்க? யாருக்கு என்ன ஆச்சு?" என்று கிருஷ்ணமூர்த்தி, ஏகாம்பரம், பங்கஜவல்லி எல்லோரும் கேட்டனர்.

"அடடே! உங்களைக் கூப்பிடவில்லை. குழந்தைக்குப் பெயர் வைப்பது சம்பந்தமாக எங்களுக்குள் சண்டை வந்து விட்டது. அதுதான் விடயம். வேண்டுமானால் இதோ கட்டிலுக்கடியில் ஒளிந்திருக்கும் திருடனைக் கேட்டுப் பாருங்கள்.

அவன்தான் இதற்குச் சாட்சி" என்றான்.

உடனே எல்லோரும் விடயத்தைப் புரிந்து கொண்டு திருடனைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார்களாம்.

நெருக்கடியான நேரங்களில் பதறாமல் புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக்கதை. புத்திசாலித்தனமாக இருக்கும் ஒரு குடும்பத் தலைவி இருக்கிறார். அவர் என்ன செய்வார் தெரியுமா?

எல்லோரும் இரவில் கதவை உட்பக்கமாக பூட்டி கொண்டு தானே தூங்குவார்கள். ஆனால் அந்த அம்மா வீட்டை வெளிப்பக்கமாக பூட்டி விடுவார். எதிர்வீட்டுக்காரர்களிடம் சொல்லி தினமும் இப்படி பூட்டி விடச் சொல்வார்.

"ஏன் இப்படி செய்றீங்க? திருடன் உட்புகாமல் இருப்பதற்காகவா?" என்று கேட்டேன்.

"இல்லை. சுலபமாக வெளியே போய்விடக் கூடாதென்பதற்காக" என்றார்.

"என்ன சொல்றீங்க?" என்றேன்.

"ஆமாம். இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு" என்று தன்னுடைய வீட்டுக்காரரைக் காட்டினார்.

"பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன் வீட்டைப் பூட்டி வைப்பது ஒரு பெரிய விடயமல்லவா?."

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு(NCICT) யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி. அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல. 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரியில் கொழும்பு சட்டக்கல்வி வட்டத்தின் வளவாளர்களினால் நடாத்தப்படவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 0777246723 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கொழும்பு சட்டக்கல்வி வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-9)

# 30 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள முப்பது வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய், திருநெல்வேலி, கொக்குவில், இணுவில் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சில நாட்களாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளை அடுத்தே இவ் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.மேலும் இவ்விடயம் பற்றி தெரிய வருவதாவது,

குறித்த வர்த்தக நிலையங்கள் உணவுப் பொருட்களான அரிசி ,மா,சீனி போன்ற வற்றின் விலைப்பட்டியலை பொதுமக்களின் பாவனைக்கு காட்சிப்படுத்தப்படவில்லையெனவும் குளிர்பானங்கள், பொறிக்கப்பட்ட விலையிலும் அதிகமான விலைக்கு விற்றமை தொடர்பாகவும் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150-180 | 160 | 90 |
| உருளைக்கிழங்கு | 55 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 170 | 200 | 150 |
| தக்காளி | 60 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 40 |
| கோவா | 50 | 80 | 70 |
| கரட் | 30 | 120 | 60 |
| பூசணி | 15 | 40 | 40 |
| புடோல் | 50 | 100 | 90 |
| வாழைக்காய் | 35 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 190 | 200 | 160 |
| பாகற்காய் | 90 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 60 | 50 |
| பயற்றங்காய் | 180 | 200 | 180 |
| லீக்ஸ் | 80 | 140 | 90 |
| பீற்றூட் | 70 | -- | 80 |
| கறிமிளகாய் | 190 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 160 | -- | -- |
| போஞ்சி | 70 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 135 | 40 | 90 |
| கீரை – 1 பிடி | 15 | 50 | 40 |
| தேசிக்காய் | 70 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 45 |

# இராசி பலன்

*30.12.2010*
*(மார்கழி 15, வியாழக்கிழமை)*
*தசமி முன்னிரவு 7.17 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 4.31 மணிவரை*
*இராகுகாலம் 1.59-3.29 மணிவரை*
*சுபநேரம் 7.59-9.29 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** உடல் நலம் சீராகும், சிறப்பான நாள், கடன் சுமையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், நண்பர்கள் சந்திப்பால் ஏற்றம் பெறுவீர்கள்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கியமான முடிவெடுப்பீர்கள், தொலைபேசித் தகவலால் மகிழ்ச்சி காண்பீர்கள், சிறிய வருமானங்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பிள்ளைகளுக்காக சில செலவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்தியொன்று வந்து சேரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பெற்றோரின் பாச அரவணைப்பில் திகழ்வீர்கள், பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும்.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர், நண்பர்கள் வலியவந்து உதவி செய்வார்கள்.

**கன்னி** தொழில் வளர்ச்சிக்கு பெரியோர் உறுதுணை புரிவர், இனிய தகவல்கள் இல்லம் தேடி வரலாம், புத்திசாதுரியத்தால் காரியம் சாதிப்பீர்கள்.

**துலாம்** பக்குவமாகக் பேசிக் காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர்களிடத்தில் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள்கள், அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** பயணங்களால் அலைச்சல் அதிகரித்தாலும் சிறு ஆதாயம் கிடைக்கலாம், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றும், விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத நேரத்தில் பெரியோர்களின் உதவி கிடைக்கலாம், தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்.

**கும்பம்** விருந்தினரை வரவேற்று சந்தோசப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், பூமியால் இலாபம் கிடைக்கும்.

**மீனம்** பிறரது வேலைகளை நீங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், எதிர்பாராத வகையில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், திடீர்ச் செலவுகளால் பணக்குறைவு ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவரிகோஸ்ட் ஜனாதிபதியால் சர்ச்சை; பேச்சு நடத்த ஆபிரிக்கத் தலைவர்கள் விரைவு

ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்டில் அதன் தற்போதைய ஜனாதிபதி லாரன் பேக்போ பதவி விலகுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் அந்நாட்டுக்கு வந்துள்ளனர்.இதனால் அங்கு மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது.

. ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள ஐவரிகோஸ்ட் உலகிலேயே கொக்கோ அதிகமாக விளையும் நாடாகும். 2000 ஆண்டுமுதல் அந்நாட்டின் ஜனாதிபதியாக லாரன் பேக்போ இருந்து வருகிறார்.

2000பின் கடந்த நவம்பர் 28ஆம் திகதி அங்கு ஜனாதிபதிக்கான பொதுத்தேர்தல் நடந்தது. அதில் எதிர்க்கட்சித் தலைவராக அலசான் வட்டார வெற்றி பெற்றார். எனினும் சதி மூலம் தான் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றுள்ளது என்று கூறிய பேக்போ பதவி விலக மறுத்து விட்டார். இதையடுத்து அங்கு உள்நாட்டு கலவரம் மூளும் அபாயம் ஏற்பட்டது. தேர்தலின் போது ஏற்பட்ட கலவரங்களில் 173 பேர் பலியாகினர். 14ஆயிரம் பேர் ஐவரிகோஸ்டின் மேற்குப் பகுதியில் இருந்து வெளியேறி பக்கத்து நாடான லைபீரியாவில் தஞ்சம் புகுந்தனர்.



அங்கிருந்த தனது நாட்டவர் அனைவரும் வெளியேற வேண்டும் என பிரான்ஸ் நாடு உத்தரவிட்டது. ஐ.நா. தனது 10 ஆயிரம் வீரர்களைஅங்குபாது காப்புப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.மேற்கு ஆபிரிக்க நாடுகள் கமிசன் தலைவரும் தென்னாபிரிக்க ஜனாதிபதியுமான தபோ பெக்கி மேற்கொண்ட சமரச முயற்சி தோல்வியடைந்த நிலையில் மேற்கு ஆபிரிக்க நாடுகள் பொருளாதாரக்குழு (எக் கோவாஸ்) பேக்போ உடனடியாக பதவி விலக வேண்டும். இல்லை என்றால் எக்கோ வாசின் படைகள் ஐவரிக் கோஸ்டுக்குள் நுழைய வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் வட்டார அங்கு நாடு தழுவிய முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தார்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நேற்று முன்தினம் அந்நாட்டுக்கு வந்த மேற்காபிரிக்க நாடுகளான சியேராலியோன் , பெனின் மற்றும் கேப் வெர்டே ஆகிய வற்றின் தலைவர்கள் பேக் போவுடன் பேச்சு வார்த்தை நடத்தும் பிரதிநிதியாக கென்யப்பிரதமர் ரைலா ஒடிங்கா பெயரை அறிவித்தனர்.

எனினும் எக்கோவாசுடன் ,பேக்போ நடத்தும் பேச்சுவார்த்தைக்கு பின்பு தான் பேச முடியும் என கென்ய பிரதமர் ஒடிங்கா தெரிவித்துள்ளார்.

ஐவரி கோஸ்டின் தெற்குப்பகுதி முழுவதும் ஜனாதிபதி பேக் போவுக்கு பெரும் செல்வாக்கு உள்ளநிலையில் மேற்கு ஆபிரிக்கநாடுகள் தலைவர்களின் முயற்சி இறுதிக்கட்ட முயற்சியாக கருதப்படுகிறது.

இதுவும் தோல்வியில் முடியுமானால் அந்நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும் என்று தகவல்கள் கூறுகின்றன. (ஸ்ரீ-2)

# கராச்சி பல்கலைக்கழகத்தில் வெடிகுண்டுத் தாக்குதல்



(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சி பல்கலைக்கழக வளாகத்துக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 பேர் காயம் அடைந்தனர்.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்ள மசூதி அருகில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்தில் வைக்கப்பட்டிருந்த குண்டை மசூதிக்கு மக்கள் தொழுகைக்கு வரும் நேரம் பார்த்து பயங்கரவாதிகள் வெடிக்கச் செய்தனர். குண்டு வெடித்த போது அப்பகுதியில் மாணவர்களும் அதிகமாக இருந்தனர்.

எனினும் குண்டு சக்தி குறைந்ததாக இருந்ததால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது பேருந்துக்கு மிக அருகில் நின்ற 8 பேர் மட்டும் காயம் அடைந்தனர்.

இவர்கள் அனைவரும் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு செய்தி தொலைக்காட்சி ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த வெடிகுண்டு சம்பவத்தால் கராச்சி பல்கலைக்கழக மாணவர்கள் கொந்தளித்தனர். பல்கலைக்கழகத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாட்டை செய்வதில் நிர்வாகம் தவறிவிட்டது. இதனால் தான் பல்கலைக்கழகத்துக்குள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சமீபகாலமாக கராச்சியில் மசூதிகளை குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இருப்பினும் கராச்சி பல்கலைக்கழகத்துக்குள் உள்ள மசூதிக்கு போதிய பாதுகாப்பு தரப்படவில்லை என்று போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர் ஒருவர் குற்றம் சுமத்தினார். வெடிகுண்டு தாக்குதலை அடுத்து கராச்சி பல்கலைக் கழகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (ஸ்ரீ-2)

# பாலஸ்தீனத்துடன் அமைதி உடன்படிக்கை மேற்கொள்வதற்கு இஸ்ரேல் இணக்கம்

(ஜெருசலம்)

பாலஸ்தீனத்துடன் இடைக்கால அமைதி உடன்படிக்கையை செய்து கொள்ளத் தாங்கள் தயாராகவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். இருநாடுகளுக்கு இடையே நீண்டகாலமாக நீடித்து வரும் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பேச்சுவார்த்தையை இஸ்ரேல் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்பதில் ஆர்வமாக உள்ளது. ஒருவேளை பேச்சுவார்த்தை மூலம் நிரந்தரத் தீர்வு சாத்தியமாகவில்லை என்றால் இடைக்கால அமைதி உடன்படிக்கையை செய்து கொள்ள இஸ்ரேல் தயாராகவுள்ளது என்று நெதன்யாகு குறிப்பிட்டார்.

இதை பாலஸ்தீனத்திடம் வலியுறுத்த தயங்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் இடைக்கால அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளத் தாங்கள் தயாராக இல்லை என்பதை இஸ்ரேலிடம் பாலஸ்தீனம் தெளிவாகக் கூறிவிட்டது.

இடைக்கால உடன்படிக்கை செய்து கொள்ளும் அளவுக்கு இந்த விவகாரம் நீர்த்துப் போன ஒன்று அல்ல. இது பாலஸ்தீனத்துக்கு முக்கியமான ஒன்று. இதில் எவ்வளவு காலமானாலும் நிரந்தரத் தீர்வை எட்டவே விரும்புவதாக பாலஸ்தீனம் பலதடவை கூறிவிட்டது.

ஏனென்றால் 1994 இல் இரு நாடுகளும் இடைக்கால அமைதி உடன்படிக்கையை எட்டியிருந்தன. அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டும் இரு நாடுகளின் நடவடிக்கையிலும் மாற்றமில்லை. தொடர்ந்து மோதல் போக்கையே கடைப்பிடித்தன. மாறி மாறி ரொக்கெட்டுகளால் தாக்கிக் கொண்டன. இதனால் அந்த ஒப்பந்தம் முறிந்தது. ஒப்பந்தம் முறிந்ததற்கு இஸ்ரேல்தான் காரணம் என்று பாலஸ்தீனம் குற்றம் சுமத்தியது. இனிமேல் அந்நாட்டுடன் இடைக்கால அமைதி உடன்பாடு என்பதற்கே இடமில்லை என்று தொடர்ந்து கூறி வருகிறது. இருப்பினும் இருநாடுகளிடையேநிலவும்இப்போதைய சூழலில் இடைக்கால அமைதி உடன் பாடேதீர்வாகும் என்று இஸ்ரேல் கூறிவருகிறது. இதற்கு பாலஸ்தீனத்தை இணங்க வைக்க தொடர்ந்து முயற்சித்து வருகிறது. (ஸ்ரீ-2)

# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பாடம் நடத்தும் ரோபோ



தென்கொரிய ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறது ரோபோ. கொரிய அறிவியல் தொழில்நுட்ப மையம் மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தரக்கூடிய நவீன ரோபோவை தயாரித்துள்ளது. வெள்ளை நிறத்தில் முட்டை வடிவில் இருக்கும் அந்த ரோபோ, ஒரு மீற்றர் உயரம் கொண்டது. அதில் தொலைக்காட்சி திரைபோல முகப்பகுதி உள்ளது. வகுப்பறை முழுவதும் சுற்றி வரும் வகையில் சக்கரங்கள் மற்றும் கைகள் தலையை அசைக்கும் வசதி உள்ளது.

இதுகுறித்து இம்மையத்தின் மூத்த விஞ்ஞானி சாகாங்சியாங் கூறுகையில் சோதனை முயற்சிக்காக 21 ஆரம்பப் பாடசாலைகளுக்கு இந்த ரோபோ வழங்கப்பட்டுள்ளது. சிறந்த திறமை, அனுபவம் நிறைந்த பிலிப்பைன்ஸில் உள்ள ஆங்கில ஆசிரியர்களால் ரிமோட் மூலம் ரோபோ இயக்கப்படும்.

வகுப்பறையில் பாடப் புத்தகத்தை வாசித்தல், பாட்டு படித்தல் போன்றவற்றை ரிமோட் மூலமே ஆசிரியர் மேற்கொள்ளலாம். மாணவர்கள் கேட்கும் கேள்விகள், சந்தேகங்களுக்கு ரோபோ உடனடியாகப் பதில் சொல்லும் என்றார்.

கல்வித்துறை அதிகாரி கிம்மியாங் கூறுகையில், ரோபோ வகுப்பறையில் அங்கும் இங்குமாகச் சென்று பாடம் எடுப்பதை மாணவர்கள் ஆர்வமுடன் இரசித்து கவனிக்கின்றனர். ஒரு இயந்திரத்துடன் பேசுவதை மறந்து மனிதனிடம் பேசுவதை போலவே அவர்கள் உணர்கிறார்கள். அதனால் பாடத்தில் அதிக கவனம் காட்டுகின்றனர் என்றார். (ஸ்ரீ-2)

# அவுஸ்திரேலியாவில் கனமழை; பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. மழையால் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள நதிகளில் அபாய அளவைத் தாண்டி நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. சில நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து நகரங்களுக்குள் புகுந்து விட்டது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதால் பிரிஸ்பேன் உள்ளிட்ட 30 நகரங்கள் கடுமையாகப் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சின்சில்லா, டால்பி, தியோடர் ஆகிய நகரங்களுக்குள் வெள்ளம் புகுந்து விட்டது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள். கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீட்கும்பணி நடந்து வருகிறது. இந்த மூன்று நகரங்களையும் வெள்ளத்தால் பாதித்தவையாக அரசு அறிவித்துள்ளது.

ஆல்பா , ஜெரிசோ, வாரா பகுதிகளுக்குள் எந்த நேரத்திலும் வெள்ளம் புகலாம் என்ற அபாயகர நிலை உருவாகியுள்ளது. இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் 1956 இல் வரலாறு காணாத வகையில் மழை பெய்தது. இதில் இலட்சக்கணக்கான மக்கள் உடைமைகளை இழந்து பாதிக்கப்பட்டனர். அதையடுத்து இப்போது தான் பலத்த மழை பெய்து வருகிறது. அங்குள்ள டேவ்சன் நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

1956 க்கு பின்னர் இப்போதுதான் டேவ்சன் நதியில் இந்த அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய அணிக்கு மரண அடி ஆஷஸ் கிண்ணம் இங்கிலாந்து வசம்

(மெல்போர்ன்)

நான்காவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி ஆஷஸ் கிண்ணத்தைத் தனதாக்கியது.

கிரிக்கெட் அரங்கில் பரம எதிரிகளான அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் முதல் மூன்று போட்டிகளில் தலா ஒன்றில் இரு அணிகளும் வெற்றி பெற தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையாகின.


இந்நிலையில் நான்காவது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் முதலில் துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணிக்கு அழைப்பு விடுத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 98 ஓட்டங்களை எடுத்துச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 513 ஓட்டங்களைக் குவித்தது. இதன் மூலம் 415 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 258 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஹடின் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும் வோட்சன் 54 ஓட்டங்களையும் சிடில் 40, சிமித் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.



பந்து வீச்சில் பிரேஷ்னன் 4 விக்கெட்டுக்களையும் சுவான் 2 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், திரீம்லெற் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றிகள் மூலம் இங்கிலாந்து 5 போட்டிகள் கொண்ட இவ் டெஸ்ட் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

அத்துடன் கடந்த ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியதன் மூலம் ஆஷஸ் கிண்ணத்தைத் தனதாக்கியது.

இங்கிலாந்து 157 ஓட்டங்களால் வெற்றி பெற்றமை ஆஷஸ் தொடரில் பெற்ற மிகப் பெரிய வெற்றியாகும்.

1956 ஆம் ஆண்டு ஓல்ட் டிரா பர்ட் மைதானத்தில் பெற்ற வெற்றிக்குப் பின்னர் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இங்கிலாந்து பெற்ற மிகப் பெரிய வெற்றியாகும்.

ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணியிடம் பறிகொடுத்த அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியை அந்நாட்டுப் பத்திரிகைகள் கந்தல் துணி என்று வர்ணித்துள்ளன.

இப்போட்டியில், இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்று தொடரில் மீண்டும் முன்னிலை பெற்றுள்ளது. இந்நிலையில் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியை அந்நாட்டுப் பத்திரிகைகள் கந்தல் துணி என்று வர்ணித்திருப்பது அவுஸ்திரேலிய ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 9-வது அகவையில் காலடி வைக்கும் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம்

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் தனது 9ஆவது அகவையில் 30.12.2010 அடியெடுத்து வைக்கிறது. யாழ்.மத்திய கல்லூரி "சென்றி னறி புளக்கில்" அமைந்துள்ள லீஞ் மண்டபத்தில் 30.12.2001 ஆம் நாள் சிரசுதயங் கண்டது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் சிரசுதயங் கண்ட பொழுது யாழ்.மத்திய கல்லூரிச் சூழல் பாராட்டிப் பெருமை பெற்றது.

சிறப்பாக யாழ்.மத்திய கல்லூரியின் அன்றைய அதிபர் அமரர் கே.இராஜதுரை அவர்களும் இன்றைய அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி அவர்களும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக ஆரம்ப நாள் அன்று யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் 69 பேர் கலந்து சிறப்பித்தனர். இவர்கள் அனைவரும் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஆவர்.

இவர்களுடன் மேலும் பல சென்றல் பழைய மாணவர்கள் உறுப்பினர்களாக இன்று உள்ளனர். கழகம் ஆரம்ப காலத்தில் சிநேக பூர்வமான போட்டிகளை நடத்தி வந்தது. கழகத்தின் முதலாவது சுற்றுப் போட்டி வீ.டி.ஜெயரத்தினசிங்கம் நினைவுச் சுற்றுப் போட்டியாகும். இந்தச் சுற்றுப் போட்டி ஆண்டு தோறும் நடத்தப் பெற்று வருகின்றது. இற்றைவரை ஏழு சுற்றுப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இந்தச் சுற்றுப் போட்டிகளில் மொத்தம் 11 வீரர்கள் சதம் அடித்துள்ளார்கள்.

சதம் அடித்தவர்கள் கௌரவிக்கப் பெறவுள்ளனர்.

யாழ்.நகரில் துடுப்பாட்ட வரலாற்றிலே முதல் முதலாக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்ற விளையாட்டுக் கழகங்களில் சிறந்த கழக அணியைத் தெரிவு செய்யும் நிகழ்வினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் யாழ்.பல்கலைக் கழகம் முதலாம் இடத்தையும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2-ம் இடத்தையும் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 3-ம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மூன்று அணிகளும் இந்நாளிலே கௌரவிக்கப்படவுள்ளன.

அகவையில் இன்றைய எமது கழகம் நடத்தும் சுற்றுப் போட்டிகளில் பங்கு கொண்டு ஆடிவரும் அனைத்துக் கழகங்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றோம்.

எமது சகோதர விளையாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுப் போட்டிகளில் எமது கழகம் தயங்காது கலந்து வருகின்றது. சகல கழகங்களுடனும் நல்ல உயர்ந்த உறவு பேணப்படுகின்றது.

கிரிக்கெட் போட்டிகளில் உள்ள ஈடுபாடு கூடைப் பந்தாட்டத்தில் எமது கழகத்திற்கு இல்லை என்று கூறுவதை மறுக்க முடியாது. எனினும் அந்தத் துறையில் எமது பங்கும் பணியும் உண்டு.


யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்துக்கு நிதி மிகுந்தோர் நிதி உதவி வருகின்றனர். சிறப்பாக இந்தப் பணியை யாழ்.மத்திய கல்லூரிப் பழைய மாணவர்கள் செய்து வருகின்றனர். பிரான்ஸ் நாட்டில் வாழும் யாழ்.மத்திய கல்லூரிப் பழைய மாணவரின் பங்களிப்பு விதந்து கூறப்பட வேண்டியதாகும்.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தின் சுற்றுப் போட்டிகளுக்கு யாழ்.மாவட்டக் கல்லூரிகள் பலவற்றின் மைதானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறப்பாக யாழ்.இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, புனித பத்திரிசிரியார் கல்லூரி, யாழ்.பல்கலைக் கழகம் ஆகியவற்றின் மைதானங்கள் சிறப்பாக எமது போட்டிகளுக்கு உதவி வருகின்றன. அனைத்துக் கல்வி அமைப்புக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

"மத்தியின் மகிமை நித்தியம் நிலைக்கும்"

# யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்திய சிறந்த கழக அணித் தெரிவு

**முதலாம் இடம் யாழ்.பல்கலைக் கழக அணி (44 புள்ளிகள்)**



நிற்பவர்கள் (இ-வ): கே.சுஜந்தன், எம்.லாவன், எஸ்.ரம்மியராகுலன், ஏ.ஜனார்த்தனா, என்.ஜனார்த்தனன், எஸ்.நிஷாந்தன், ஆர்.தசரீததன், எஸ்.பிரகாஷ் பேய்சன், கே.செல்ரன்

இருப்பவர்கள் (இ-வ): திரு.ஜீ.டி.மதியழகன் (பயிற்றுநர்), எ.ஜெயந்திரன், எஸ்.சிறிறஜீவன், பி.திவாகரன் (தலைவர்), ஈ.ஜெயரூபன் (உப தலைவர்), பி.சஞ்ஜீபன், திரு.கே.கணேஸநாதன் (அத்தியட்சகர்-உடற்பயிற்சிக் கல்வி), ரி.பவிந்திரன் (சமுகமளிக்கவில்லை)

யாழ்.பல்கலைக் கழக அணியினர் 13 போட்டிகளில் பங்குபற்றி, 5-30 ஓவர் போட்டிகளிலும், 1-40 ஓவர் போட்டியிலும், 5-50 ஓவர் போட்டிகளிலும் வெற்றி பெற்று 44 புள்ளிகளைப் பெற்றனர்.

**இரண்டாம் இடம்: ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் (37 புள்ளிகள்)**



நிற்பவர்கள் (இ-வ): எஸ்.நிரஞ்சன், ஏ.அருண்குமார், என்.பகீரதன், ஆர்.ராஜாதித்தன், என்.நவயுகன், ஆர்.நிரூஞ்சன், எஸ்.வாமணன்

இருப்பவர்கள் (இ-வ): என்.ஜெயராஜா, கே.நாதன், எஸ்.சிறிபிரசன்னா (உப தலைவர்), என்.சிவராஜா, எஸ்.உமாதரன்

சமுகமளிக்காதவர்கள்: எஸ்.மணிவண்ணன் (அணித் தலைவர்), எம்.மதூசன், எஸ்.சஜீகன்

ஜொலிஸ்ரார் அணியினர் 16 போட்டிகளில் பங்குபற்றி, 3-20 ஓவர் போட்டிகளிலும், 7-30 ஓவர் போட்டிகளிலும், 2-50 ஓவர் போட்டிகளிலும் வெற்றி பெற்று 37 புள்ளிகளைப் பெற்றனர்.

**மூன்றாம் இடம்: யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் (28 புள்ளிகள்)**



நிற்பவர்கள் (இ-வ): டி.சுதர்சன், என்.சசிகாந்த், சத்யன், எஸ்.சுபாதீஸ், கே.கலிஸ்ரன், பி.சலீஸ்ரன், சொ.விமலதாசன் (முகாமையாளர்)

இருப்பவர்கள் (இ-வ): எஸ்.விமலகாந் (உப தலைவர்), எஸ்.கபீல்தேவ், சா.றாஜீவ், ஏ.ஜெசிந்தன் (தலைவர்), வி.றஜீவ்குமார், பி.பாலேந்திரா

யாழ்.சென்றல் அணியினர் 11 போட்டிகளில் பங்குபற்றி 2-20 ஓவர் போட்டிகளிலும், 3-30 ஓவர் போட்டிகளிலும், 3-50 ஓவர் போட்டகளிலும் வெற்றி பெற்று 28 புள்ளிகளைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE COLLEGE OF CHEMISTRY

பழம் வீதி இல.32 கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.



**2013 A/L**

DIAS B.Sc (Hons) Spl.in Chem.

தமிழ் மொழி மூலம்

Sat Sun Fri } 3.00 - 4.30 PM

English Medium Sat Sun } 6.15 -7.30 AM

(3316)

## சிவனொளிபாத மலை யாத்திரையின் போது

சிநேகிதபூர்வமான, அமைதியான, சுகாதார மான சூழ்நிலையில் வசதி வாய்ப்புகளுடன் கூடிய அறைகள் வழங்கப்படும்.நியாயமான விலையில் காலை, மதியம், இரவு உணவுகளும் தூய சைவ முறையில் சமைத்து வழங்கப்படும்.சுடுநீர் குளியல் வசதி, சலவை வசதி, வாகன வசதிகளும் பெற்றுக்கொள்ள முடியும். தொடர்புகளுக்கு:

வீரபத்திரன்- 051 351 9478 OR 777 259421

நல்ல தண்ணி, மஸ்கெலியா.

(நல்ல தண்ணி பஸ் தரிப்பிடம் அருகாமை)

(3315)

## கண்ணீர் அஞ்சலி

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய ஆசிரியை



திருமதி பரமசிவம் சந்தானலக்ஷ்மி

அவர்களின் மாமனார்

**கணபதிப்பிள்ளை அப்புத்துரை**

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

(ஆசிரியர் நலன்புரிச் சங்கம்)

(3313)

## தொழில்நுட்பவியலாளர் தேவை

ரேடியோ, TV பழுது பார்த்தலில் முன் அனுபவம் உள்ள தொழில்நுட்பவியலாளர் வேலைக்குத் தேவை.யாழ்ப்பாணம்,கொழும்பில் தங்குமிடம், உணவு,சம்பளம் கொடுக்கப்படும்.மேலும் கணனி, கணனி உபகரணங்கள் திருத்துவதற்கு ஆர்வம் உள்ளவர்கள் நேரில் வரவும்.மேலதிகப் பயிற்சி வழங்கப்படும். (நேரம்- 10.30 - 4.30 பி.ப.)

தொடர்புக்கு: 218, ஆஸ்பத்திரி வீதி ,யாழ்ப்பாணம். 021 222 5893

(சி-1994)

## காணாமல்...

தெரிவித்துள்ளனர்.இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது. இந்நிலையில் அவரது சடலம் நேற்று மீட்கப்பட்டது. கனகம்புளியடி வேம்பிராயிலுள்ள மயானத்திற்கு அண்மையில் இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவர் கப்பம் கோரியே கடத்தப்பட்டதாக அவரது தந்தையார் தெரிவித்துள்ளார்.(ச-5,7,29)

## இலங்கை தமிழ்...

இவர் பணியாற்றும் வேலைத்தளத்தில் இரவு கொள்ளையர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என பெற்றோர் தெரிவித்தனர்.மேற்படி இளைஞனின் சடலத்தை எடுத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-5)

## அமைச்...

கொண்டு கருத்து தெரிவிக்கும் போது மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் கருத்து தெரிவித்த போது, எமது வெளிவிவகார அமைச்சரை பொய் கூறுபவர்களாகவே உலகம் பார்க்கிறது என்று குறிபிட்டுள்ளார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேபாள நாட்டு ஜனாதிபதி எமது நாட்டின் ஜனாதிபதியை தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக அழைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதற்கு உடனடியாக நேபாள அரசு மறுப்பு தெரிவித்ததுடன் தமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிட எவருக்கும் அழைப்பு விடுக்கவில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இது நாட்டுக்குப் பாரிய அபகீர்த்தியை ஏற்படுத்தியது. இதற்குமுன் எப்போதும் இவ்வாறான சம்பவம் நடந்ததில்லை. இந்த அபகீர்த்திக்குப் பரிகாரம் தேடும் வகையில் பிரதி வெளிவிவகார அமைச்சரை நேபாளத்திற்கு அனுப்பி தனிப்பட்ட ரீதியில் மன்னிப்புக் கோரப்பட்டது. இவ்வாறானதொருநிலைதான் இன்று நாட்டில் காணப்படுகிறது. இந்த நிலைமாற வேண்டுமாயின் எமது ஆட்சி மலர வேண்டும் என இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (ச-5)

## MyWay English ஆங்கில பயிற்சி

01.01.2010 சனி புதுவருட விடுமுறை

சனி, ஞாயிறு 3 மாத புதிய பிரிவு

ஆரம்பம் : 02.01.2011 முடிவு : 31.03.2011

இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்

பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்

MyWay 077 33 63 456 182, Stanley Rd, Jaffna

## கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி

**ENGLISH CLASS**

பிரிவு II

by:S.சடகோபன்

ஆரம்பம்:30.12.2010 மு.ப.9.00

- O/L எடுத்த மாணவர்களுக்கு
- அனுமதி 60 மாணவர்களுக்கு மட்டும்
- முன்கூட்டியே அனுமதியைப் பெறவும்

(3300) -நிர்வாகி

## பமிலி சுப்பர்



கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் பிஸ்கட், பாஸ்மா, சொக்லேட்,சிற்றுண்டி வகைகள்,ஐஸ் கிறீம் வகைகள்,பழவகை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

சந்தைக்கு அருகாமை, மானிப்பாய்.

புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு விற்பனை

(சி-1956)

# THE SCIENCE CORNER

CLOCK TOWER LANE,JAFFNA.

2013 A/L — TAMIL,ENGLISH -MEDIUM-

ஆரம்பம்: 01.01.2011 (சனி)

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| 11.00 A.M | 2.30 P.M |

வழமையான ஆசிரியர் குழாம்

(3318)

# CHEMISTRY COURT

80, ARASADY ROAD, JAFFNA.

இரசாயனவியல் - 2013 A/L

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்

ஆரம்பம் : 01. 01. 2011 (சனி) 9.00 A.M

நேர அட்டவணை அலுவலகத்தில்

By : RAJAH ( B.Sc (Chem.Spl))

(3317)

## யுனிலங்காஸ் பஞ்சாங்கக் கலண்டர்கள் தினத்தாள் கலண்டர்கள்

நாடெங்கிலும் இப்போது அமோக விற்பனையில்...

### யுனிலங்காஸ் நாட்காட்டி

தவறு இல்லாத வாக்கியப் பஞ்சாங்கக் கணிப்பில் தெளிவான அச்சமைப்புடன் அழகுதரும் தெய்வீக வண்ணப்படங்கள். பொது அறிவு. பொன்மொழிகள், தினசரி ராசிபலன்கள், சுபமுகூர்த்ததினங்கள் போன்ற விடயங்களுடன் யுனிலங்காஸ் நாட்காட்டிகள்

### பஞ்சாங்கக் கலண்டர்கள்

முற்றிலும் வர்ணமயமான அச்சமைப்புடன், இதுவரை எந்த நிறுவனமும் இலங்கையில் அச்சிடாத வகையில் கலண்டரின் பின்பகுதியில் சென்னை வடபழனி முருகு பாலமுருகன் அவர்கள் எழுதிய மாத ஜோதிடத்துடன், ஒருவருட சுபமுகூர்த்த தினங்களும் இணைத்து 32 வடிவ பிள்ளையார், நயினை நாகபூஷணி அம்மன், கதிர்காமம், நல்லூர், யாழ் நூலகம் போன்ற காட்சியமைப்புக்களுடன் வெளிவந்துள்ளது.

பஞ்சாங்கக் கலண்டர் வாங்கும்போது கலண்டரின் பிற்பக்கத்தில் சென்னை முருகு பாலமுருகனின் 2011 ஆம் ஆண்டுக்கான மாதாந்த ராசிபலன் உள்ளதா என்பதை பார்த்து வாங்குங்கள்...

பெயர் பார்த்து வாங்குவதற்கு அல்ல
தரம் பார்த்து வாங்குவதற்கே யுனிலங்காஸ் வெளியீடுகள்

யுனிலங்காஸ் 32, சென்.அன்ரனீஸ் மாவத்தை கொழும்பு - 13, 0776258778

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்



**2013 A/L**



கணித உயிரியல் பிரிவுகள்

தமிழ் மொழி மூலம் English Medium

எமது வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம் :05.01.2011 WED 8.30 AM

(C-1976)

அரச பதிவுக்கோப்பு இல: NP/14/45(2)/RE/920

## இமயம் கல்வி நிறுவனம்

Institute of Imayam

சிவிக் சென்ரர் வட்டக்கச்சி.

2011 புதிய கல்வியாண்டு உயர் பெறுபேறு நோக்கி

17.12.2010 முதல் சிறப்பாக நடைபெறுகிறது. எமது யாழ். வன்னி பிரபல ஆசிரியர் குழு இதோ!

6 - 11 கணிதம்:- சுபாஸ், கேதீஸ்,பிரபா,நிலக்சி,
விஞ்ஞானம் :- அகிலன், கோகுலன், திருமதி தேனுகா
தமிழ்:- செந்தூரன், ராஜா, ஜமுனா
ஆங்கிலம்:- ஞானம், தனராஜா
வரலாறு :- திருமதி.பரமேஸ், வசந்தரூபன்,ரதி
சமயம்:- பரமசிவம், சாந்தி

ஆரம்பக்கல்வி, புலமைப்பரிசில் நோக்கிய கல்வி ஈசன், பிரதாப், மனோ, நிலக்சி, ஞானம்

- முதல் இரு தவணைகளுக்குள் அனேகபாடப் பரப்புகள் முடிவடைவதுடன் அவ்வப்போது பரீட்சைகள், சான்றிதழ்கள், பரிசளிப்புகள் மற்றும் கல்விச்சுற்றுலாக்கள்.
- பல்கலைக்கழக மாணவர்கள், வளர்ந்தோர் உத்தியோகத்தருக்கான சிங்கள மற்றும் ஆங்கில மொழி 3 மாத கால இரவு, மாலைநேர வகுப்புக்கள்.
- ஜனவரி முதல் ஆரம்பப் பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்.
- வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டுமே வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 0776114068

உயர்தர வகுப்புகள் விரைவில்

"இமயம் மாணவர்களின் இதயம்"

(சி-3314) நிருவாகி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org